# குண்டூசி

ஜனவரி 48

எட்டு அணா

458

# பில்ஹணன்

காதல் சித்திரம்

டி.கே.எஸ். பிரதர்ஸ் & சேலம் ஷண்முகா பிலிம்ஸ் தயாரிப்பு

எதிர்பாருங்கள்!
ஸ்ரீ ஜகதீஷ் பில்ம்ஸ் லிமிடெட்
ராமதாஸ்
தமிழ்.
நடிகர்கள்:
Y.V. ராவ். குமாரி ருக்மணி
களக்காடு ராமநாராயணன்
ஜயகௌரி மற்றும் பலர்..
ஸ்டுடியோ:
நியூதியேட்டர்ஸ், கல்கத்தா
டைரக்டர்:
Y.V. ராவ்
P.C.C. RELEASE
பால்காட் கமர்ஷியல் கார்ப்பரேஷன்
பால்காட் 6 மதராஸ், 5

13 FEB 1948


..விரைவில்..

# வெளிவருகிறது...

ஸ்டார் கம்பைன்ஸ் & ப்ரகதி பிக்சர்ஸ்

....தயாரிக்க....

# சம்சாரநௌகா

(தமிழ்)

T. பிரேமாவதி - B.R. பந்துலு
T. சூர்யகுமாரி - T.R. ராமச்சந்திரன்
M.J. ஆண்டாள் - R. கிருஷ்ணமூர்த்தி
T.K. உபேந்திரா - கல்யாணம் - மதுரம்

நடித்தது

கதை & டைரக்ஷன்: H.L.N. சிம்ஹா, ஸ்டுடியோ: ப்ரகதி

சென்னை, வட & தென் ஆர்காடு, செங்கற்பட்டு, சித்தூர் ஜில்லா & பாண்டிச்சேரி: நேஷனல் பிக்சர்ஸ், வேலூர்

விவரங்களுக்கு: ஸ்டார் கம்பைன்ஸ் லிமிடெட்
மவுண்ட் ரோட்....... மதராஸ்-2

எல்லா முக்கிய நகரங்களிலும் எதிர்பாருங்கள்!

டி. எஸ். பாலையா, எஸ். டி. சுப்பையா, காளி என். ரத்தினம், கே. பி. ஜெயராமன், எம். ஆர். சந்தானலக்ஷ்மி, ஆர். பத்மா, குமாரி சரஸ்வதி, சகுந்தலா, மற்றும் பலர் நடித்தது.

சங்கீதம் : பி. வி. சாமா

கதை, வசனம் : டி. என். ராமய்ய தாஸ்

பாட்டல்கள் : பி. ஆர். ராஜகோபாலய்யர்

டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

சேலம், கோவை, நீலகிரி :— லோகநாதா பிக்சர்ஸ், அரிசிப்பாளையம், சேலம்.
மைசூர், தென் கன்னடம் :— ஜெயமணி பிக்சர்ஸ், பெங்களூர் ஸிடி.
தென், வட ஆற்காடு, சித்தூர், செங்கல்பட்டு :— ராஜ ராஜேஸ்வரி பிலிம்ஸ் கடலூர் O. T.

மற்ற விவரங்களுக்கு :

**தி செல்வம் பிலிம் கம்பெனி,**

**எக்ஸ்டென்ஷன், சேலம்.**

வெளிவரும் தேதியை எதிர்பாருங்கள்

ஸ்டுடியோ—மாடர்ன்

| டைரெக்ஷன் : | பாடல் : | சங்கீதம் : | வசனம் : |
|---|---|---|---|
| லங்கா சத்யம் | P. R. ராஜகோபாலய்யர் | சாமா | தில்லை பொன்னப்பா |

விநியோக உரிமை :

திருவாங்கூர், கொச்சி, மலபார் : கோபாலகிருஷ்ணா பிலிம்ஸ், கோட்டயம்.

சேலம், கோயமுத்தூர், நீலகிரி : ஸ்ரீ வஸந்தா பிலிம்ஸ், சேலம்.

★ ★

ஸுரபி
பிக்சர்ஸின்
உன்னத
கன்னடப்
படம்

ஹொன்னப்ப
பாகவதர்
லக்ஷ்மிபாய்
நடிக்கும்

★ ★

# பக்த கும்பாரா

—: மற்றும் :—

| | |
|---|---|
| ராகவேந்திர ராவ் | லக்ஷ்மம்மா |
| முராராச்சார் | ஜெயஸ்ரீ |
| ஸீதாராம சாஸ்திரி | பண்டரி பாய் |
| மஹாபல ராவ் | ராமா பாய் |

டைரெக்ஷன் :
பொம்மன் டி. இரானி

| சங்கீதம் : | ஸ்டுடியோ : | பாட்டுகள் : |
|---|---|---|
| ஸி. எச். பாகவதர் | பிரகதி | கே. ஆர். எஸ். சாஸ்திரி |

விவரங்களுக்கு

ஸுரபி பிக்சர்ஸ்,

தேவி பில்டிங்ஸ் :: அடையார் :: சென்னை.

ஸ்வர்ண ரிலீஸ்

இப்பொழுது நடைபெறுகிறது

குஹன் பிக்சர்ஸ் தயாரிப்பு



# ஜம்பம்

ஜனவரி 14உ முதல்

ஸிடி ஸினிமா — மதுரை
ஸாகர் மூவிடோன் — பாண்டிச்சேரி
அழகப்பா தியேட்டர்ஸ் — நாகர்கோவில்

15-1-48 முதல்

எம். கே. டாக்கிஸ் — ஆம்பூர்

23-1-48 முதல்

ராஜா டாக்கிஸ் — புதுக்கோட்டை

எதிர்பாருங்கள்!

மைசூர், அரக்கோணம், குடியாத்தம், உதகமண்டலம், வெல்லிங்டன், கூனூர், அருப்புக்கோட்டை முதலிய நகரங்களில்

விவரங்களுக்கு

குகன் பிக்சர்ஸ் லிமிடெட்,

55, புரசவாக்கம் ஹைரோட், வேப்பேரி, மதராஸ்-7.

1948 புது வருஷத்தில்
நரேந்திரா பிக்சர்ஸ்
தயாரிக்கும்
பாகவதர் • சாமா
பானுமதி
ஜானகி • ராஜகாந்தம்
சாமிநாதன் • வீரப்பா
ரங்கராஜு • சகாதேவன்
நடிக்கும்
ராஜ முக்தி
டைரக்ஷன்
ராஜா சந்திரசேகர்
பாடல்கள்
சிவன்
வசனம்
புதுமைப்பித்தன்
ஸ்டுடியோ: ப்ரபாத்... புனா

# குண்டூசி

மாஸ சினிமாப் பத்திரிகை

## சந்தா விவரங்கள்

உள் நாடு :

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 6 |
| ஆறு மாஸ சந்தா | ரூ. | 3 |
| தனிப் பிரதி | அணா | 8 |

இலங்கை :

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 6 |
| தனிப் பிரதி | சதம் | 50 |

வெளி நாடு :

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 9 |
| தனிப் பிரதி | அணா | 12 |

## விளம்பர விகிதங்கள்

(ஒரு தடவைக்கு)

| | | |
|---|---|---|
| முன் பக்க அட்டை | ரூ. | 450 |
| கடைசிப் பக்க அட்டை | ரூ. | 250 |
| 2 & 3-ம் பக்க அட்டை | ரூ. | 150 |
| சாதாரண ஒரு பக்கம் | ரூ. | 75 |
| சாதாரண அரைப் பக்கம் | ரூ. | 40 |
| சாதாண $\frac{1}{3}$ பக்கம் | ரூ. | 30 |

### கட்டுரையாளர்களுக்கு

"குண்டூசி"க்கு கேள்விகள், நேயர்களின் அபிப்பிராயங்கள், உங்கள் ஊர் சினிமா நிகழ்ச்சிகள், சினிமா சம்பந்தமான விகடத் துணுக்குகள், கட்டுரை, கதைகள், நாடகங்கள் இவையெல்லாம் வரவேற்கப் படுகின்றன. எழுதி அனுப்புபவைகளைக் காகிதத்தின் ஒரே பக்கத்தில், மையினால் சுத்தமாக எழுதி அனுப்ப வேண்டும்.

காரியாலயம் :

246, தம்பு செட்டி தெரு,
சென்னை 1.

# இந்த ஊசியில்

—*—


புதிய வருஷம் ... ... 9

உள்ளது உள்ளபடி —"ஜடாயு" ... 10

சுவர்ச் சித்திரம் — திரைச் சித்திரம் ... 11

ஏ. ஆர். சகுந்தலா —மூவர்ணப் படம் ... 14

ஏ. ஆர். சகுந்தலா —"குண்டூசி" ... 15

தமிழ் ராமராஜ்யம் —விமர்சனம் ... 21

குண்டூசியைக்கேளுங்கள்... 24

செய்திப் படங்கள் ... ... 31

நுனிப் புல்—"வெட்டுக்கிளி" 40

பொதுஜனம் பேசுகிறார் ... 44

1000 தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி—படக் கதை... 47

இது செய்தி ... ... 51

எம். கே. டி. பாகவதர் —மூவர்ணப் படம் ... 55

பிரம்மலோகம் ... ... 57

தமாஷ் சித்திரம் ... ... 60

கிச்சு - பிச்சு —ச. து. சு. யோகி ... 61

குண்டூசி டைரி ... ... 68


அட்டைப் படம் :

அதிவிரைவில் முடிவடைந்து வரும் "பில்ஹணன்" தமிழ்ப் படத்தில் டி. கே. ஷண்முகமும், எம். எஸ். திரௌபதியும்.

விரைவில் வருகிறது

**T.R. மஹாலிங்கம்**
**M.V. ராஜம்மா**

நடித்த

# ஞான சௌந்தரி

F. நாகூர்
ஜோஸப் தளியத் JR.
நியூடோன்

| | |
|---|---|
| D. பாலசுப்ரமண்யம் | பேபி ராஜாமணி |
| P.S. சிவபாக்யம் | P.R. மங்களம் |
| C.V. நாயகம் | P.G. வெங்கடேசன் |
| B. சாரதாம்பாள் | புளிமூட்டை ராமசாமி |

லலிதா & பத்மினி

**THE CITADEL FILM CORPORATION LTD.**
MADRAS 10.

பொங்கல் புது நாளில்
எங்கள் மங்கள
வாழ்த்துகள்

## நீல மாளிகை

நாகரீக ஜவுளி வியாபாரிகள்

3/4, தெற்கு சித்திரை வீதி, மதுரை.

பட்டை 1

ஊசி 4

# குண்டூசி

ஜனவரி

1948

ஆசிரியர்

பி.ஆர்.எஸ்.கோபால்


## புதிய வருஷம்

**1948**-ம் வருஷம் பிறந்து விட்டது. இவ் வருஷம் சினிமாத் தொழிலைப் பொருத்தவரையில் குதூகலமாகவே ஆரம்பமாகிறது. பல படங்கள் வெளி வந்து கொண்டிருக்கின்றன; ஒன்றிரண்டு மாதங்களில் மற்றும் பல படங்கள் வெளிவரக் காத்திருக்கின்றன. இது நல்ல சூசனைதான்.

சென்ற வருஷம் சினிமாத் தொழிலுக்கு ஒரு சோதனை வருஷமாகவே அமைந்திருக்கிறது. யுத்தம் முடிந்தபின் பண முடக்கம் ஏற்படும் என்று பத்திரிகைகள் எவ்வளவோ எச்சரித்தன. ஆனால் பட உலகம் மட்டும் முன் எச்சரிக்கையாக எதுவும் செய்து கொள்ளவில்லை. அதன் விளைவாக, பல படக் கம்பெனிகள் மூடப்பட்டன. பல படங்கள் பாதியளவில் தவித்துக் கொண்டிருக்கின்றன. வேறு சில படங்கள் முடிவடைந்தும் வெளிவராமலிருக்கின்றன. சில நக்ஷத்திரப் படங்கள் படுதோல்வி அடைந்தன. பணத்தை வாரிக் கொண்டு போகத் திட்டம் போட்டவர்கள் படு நஷ்டம் அடைந்தார்கள். நக்ஷத்திரங்களுக்கு லக்ஷக் கணக்கில் பணம் கொடுக்க முடியாதவர்கள் புதிய முகங்களைப் போட்டு பரிக்ஷித்து வருகிறார்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் எதிர்பார்த்தது நடவாமலும், எதிர்பாராதவை நடப்பதுமாய்ச் சென்ற வருஷம் கழிந்தது.

சென்ற வருஷத்தின் இறுதியில் படத் தொழிலில் ஒரு சுறுசுறுப்பு ஆரம்பமாகியது. விநியோகஸ்தர்களுக்காக இனிக் காத்திருப்பதில் பயனில்லை என்று பலர் தாம் தயாரித்த படங்களை வெளியிடமுற்பட்டனர். தற்போது பட உலகில் காணப்படும் கலகலப்புக்குக் காரணம் இதுதான். இந்த கலகலப்பு இன்னும் சில மாதங்களுக்கும் நீடிக்கும்.

தற்போது நம் சினிமாத் தொழில் அநேகமாக ஒழுங்கு பட்டுவிட்டது எனலாம். அதிர்ஷ்டத்தின் மேல் நம்பிக்கை வைத்து படத் தயாரிப்பில் ஈடுபட்டவர்களெல்லாம் மறைந்து விட்டனர். உண்மையிலே கையில் பசையுள்ளவர்கள் மட்டுமே தங்கியிருக்கிறார்கள். ஆதலால் இந்தவருஷத்தில் இத்தொழில் சரியான திட்டத்துடன், சரியான பாதையில் முன்னேறும் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படுகிறது.

புது வருஷத்தை முன்னிட்டும், பொங்கலை முன்னிட்டும் அநேக வாசகர்களும், நண்பர்களும் நமக்கு வாழ்த்துகளை அனுப்பியிருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் நம் வந்தனத்தைத் தெரிவிக்கிறோம். இந்தப் புது வருஷம் அவர்களுக்கும், படத்தொழிலுக்கும் சுபிக்ஷ வருஷமாய் விளங்குமாறு பிரார்த்திக்கிறோம்.

# உள்ளது உள்ளபடி

## ஜடாயு

சென்ற ஊசியில், "தணிக்கை போர்டார் இந்தியப் படங்களில் ஒரு குறிப்பிட்ட காட்சியை வெட்டிவிட்டு அதே போன்ற காட்சியை மேனுட்டுப் படங்களில் காட்ட அனுமதிப்பது சரியான கொள்கை ஆகாது" என்று எழுதியிருந்தேன்.

இதை எழுதியபின் பம்பாயிலிருந்து கிடைக்கும் ஒரு செய்தி எனக்குத் திருப்தியை அளிக்கிறது, அங்கு சமீபத்தில் பல ஆங்கிலப் படங்களில் கத்தரிக்கோல் பிரயோகம் செய்யப்பட்டு வருவதாக அச்செய்தி கூறுகிறது. ஆகஸ்ட் மாஸத்தில் பம்பாய் போர்டார் பார்த்த 16 படங்களில் மூன்று படங்களைக் காட்டவே கூடாது என்று தடை விதித்துவிட்டனர். நான்கு படங்களிலோ ஆங்காங்கே சில பாகங்களை வெட்டிவிட்டு அனுமதித்திருக்கின்றனர்.

இந்தப் படங்களை தணிக்கை செய்த அதிகாரி கூறுவது கவனிக்கத் தக்கது: "இந்தப் படத்தைக் காட்டக் கூடாதென்று தடை விதிப்பதற்குக் காரணம், இதில் பொழுது போக்கு அம்சமோ அல்லது அறிவு போதனையோ இல்லை. இதில் ஒரு கொலையும், ஒரு விவாஹமான ஸ்திரீயின் அசங்கியமான காதலுமே சித்திரிக்கப்பட்டிருக்கிறது. பட முதலாளிகள் தங்கள் படங்களில் மனித வர்க்கத்தை கந்தர்வர்களாகச் சிருஷ்டிக்க வேண்டுமென்று சொல்ல வில்லை. ஆனல் அவர்கள் வாழ்க்கையை அது உள்ளதை விட அதிக மோசமாய் சித்திரித்துக் காட்ட முற்பட வேண்டியதில்லை."

"அமெரிக்காவில் தற்போது தயாரிக்கப்படும் படங்களில் நூற்றுக்கு எண்பது படங்கள் குழந்தைகள் பார்ப்பதற்கு லாயக்கற்றவை. நூற்றுக்கு 37 படங்களில் நிச்சயமாய் அபாயகரமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன" என்று அமெரிக்க சினிமா ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர்.

அப்படியிருக்க, ஹாலிவுட் மேனுட்டுப் பட முதலாளிகள் மிக சிரமப்பட்டு பல ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ள நமக்குத் தங்கள் படங்களை அனுப்பியிருக்கிருர்களே என்பதற்காக அந்தப் படங்களை இங்கு காட்ட அனுமதிப்பது கெடுதலையே விளைவிக்கும். உதவாத காட்சிகள் எந்தப் படத்தில் இருந்தாலும் வெட்டி விடச் செய்வதே நியாயம். இந்தக் கொள்கையை அனுஷ்டானத்தில் முதன் முதலாகக் கொண்டு வந்து விட்டதற்காக பம்பாய் தணிக்கை போர்டாரைப் பாராட்டுகிறேம். இதே போல் நம் சென்னை தணிக்கை போர்டும் செய்யும் என்று நம்புகிறேன்.

### முன் யோசனை இல்லை

பம்பாய் தணிக்கை போர்டார் அமெரிக்கப் படங்களுக்கு தடை விதித்ததின் பிரதிபலிப்பு அமெரிக்காவிலிருந்து இந்தியாவை எட்டுகிறது. இந்தியாவில் இனி தணிக்கை போர்டாரின் கத்தரிக்கோலிடை சிக்கி அவஸ்தைப்

கவர் சித்திரம்
திரைச் சித்திரம்
மகில்.

படாமலிருக்க வேண்டுமானல் எந்த மாதிரியான படங்களே இந்திய மார்க்கெட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற விஷயத்தை அவர்கள் இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருக்கிருர்களாம். இந்தச் செய்தியாவது நம் பட முதலாளிகளேத் தட்டி எழுப்ப வேண்டும். சென்ற ஒரு வருஷ காலமாக நம் மாகாண தணிக்கை போர்டார் புதிய கொள்கையைக் கையாளத் தொடங்கி அதன் விளேவாக சில படங்களில் பல காட்சிகள் வெட்டப்பட்டுமிருக்கின்றன. அப்படியிருக்க தணிக்கை போர்டாரின் கொள்கை என்னவென்பதை அறிந்து கொள்ளுவதற்கோ அல்லது அவர்களின் ஆட்சேபணே ஏற்படாதபடி எந்த வகையில் படங்களேத் தயாரிக்க வேண்டுமென்பதை அறிந்து கொள்ளுவதற்கோ நம் படப் பிடிப்பாளர்கள் தீவிர முயற்சி ஏதும் செய்யாதது வருந்தத்தக்கது.

ஆனல் நம் படக் கர்த்தாக்கள் தாங்களாகவே ஒரு நல்ல காரியத்தையும் செய்து விடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு அறவே அழிந்து விட்டது. பணம் சேர்ப்பது ஒன்றைத் தவிர தேச நன்மை, சமூக நன்மை முதலியவற்றையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு அவர்கள் படம் தயாரித்தது மில்லே; தயாரிக்கப் போவதுமில்லே. ஆதலால் சினிமாக் கலே மூலம் சமூகத்திற்கும், தேசத்திற்கும் ஏற்பட்டு வரும் கெடுதல் நீங்கி, நன்மை ஏற்பட வேண்டுமானல் அது சர்க்காரின் தலேயீடின்றிச் சாத்தியமேயில்லே.

### சினிமாவும் சர்க்காரும்

திருஷ்டி போதன முறையை இலங்கை சர்க்காரும் மேற்கொண்டிருப்பதாகவும், இத்திட்டத்திற்கு அங்குள்ள மக்கள் மிகுந்த ஆதரவு காட்டி வருவதாகவும் செய்தி எட்டுகிறது. ஆதலால் அந்த சர்க்கார் தீவிர ஏற்பாடுகளேச் செய்வதில் முனேந்திருக்கிருர்களாம். நம் சென்னே சர்க்கார் கூட திருஷ்டி போதன முறையை முன்பே அங்கீகரித்து விட்டனர். இத்திட்டத்தை சீக்கிரமாய் நடை முறைக்குக் கொண்டு வருவதற்கு சுறுசுறுப்பான ஏற்பாடுகளே அவர்கள் உடனே செய்ய வேண்டும். இது ஒரு புறமிருக்க இந்திய சர்க்கார் இந்தியச் செய்திப் பட ஸ்தாபனத்தையும், டாக்குமென்டரி படங்களேத் தயாரிக்கவும் துரிதமான ஏற்பாடு செய்து வருகிருர்களாம். அதோடுகூட தாங்கள் தயாரிக்கும் படங்களே தியேட்டர்களில் காட்டியே ஆக வேண்டும் என்று முன்போலவே வற்புறுத்தவும் செய்வார்களாம்.

### வற்புறுத்தலுக்கு ஆதரவு ?

முன்பு இத்தகைய வற்புறுத்தலே எல்லோரும் ஒரு முகமாக எதிர்த்தனர். காரணம், அந்தப் படங்களெல்லாம் நமக்குச் சம்பந்தமற்ற ஒரு யுத்தத்தைப் பற்றிப் பிரசாரம் செய்து வந்ததுதான். மேலும் ஜனங்களும் இப் படங்களே வெறுத்தனர். ஆனல் முன்பு வற்புறுத்தலே வெறுத்தவர்களே இப்பொழுது அதற்கு ஆதரவு அளிப்பார்கள்; இப் படங்களே முன்பு வெறுத்தவர்களே இப்பொழுது விரும்புவார்கள் என்பது நிச்சயம். ஏனென்ருல் தற்போதைய சர்க்கார் நம் சர்க்கார்; அது செய்யப் போகும் பிரசாரம் நம் பிரசாரம். இப் படங்களேக் காட்டுவதே ஒரு தேச சேவை ஆகுமல்லவா ?

“ குடும்ப வாழ்க்கை ”

தமிழ்ப் படத்தில் நடிக்கும்

பார்வதி

கிருஷ்ண பிக்சர்ளின் "கிருஷ்ண
பக்தி" தமிழ்ப் படத்தில் ருக்மணி
ாக நடிக்கும் ஏ. ஆர். சகுந்தலா.

# ஏ. ஆர். சகுந்தலா

## வாழ்க்கை வர்ணனை

## குண்டூசி

பிரபல பால ஸரஸ்வதி மேடைக்கு வந்தது! முதல் நாட்டியக் கலைக்கு ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகியது என்று கூறலாம். அவர் பரத நாட்டியத்தை அழகாக ஆடிக் காட்டியதும் பொது ஜனங்களுக்கு அக்கலையில் ஒரு புது ருசி ஏற்பட ஆரம்பித்தது. அநேகருக்கு இக்கலையைக் கற்கவேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. முன்பெல்லாம் தேவதாஸிகளின் வளர்ப்புக் கலையாக மட்டும் இருந்த பரத நாட்டியம் ஒரு மஹாமஹ காலத்திற்குள் உயர் குடும்ப ஸ்திரீகள் பலரும் விரும்பிக் கற்று மேடையில் ஆடிக் காட்டும் நிலையை அடைந்திருக்கிறது.

தென்னிந்தியாவில் நாட்டியக் கலைக்கு ஏற்பட்டு வந்த புதிய மௌஸை அறிந்த உதய சங்கர், சாதனா போஸ், லீலா தேசாய், அசூரி முதலியவர்கள் தங்கள் நடன கோஷ்டியுடன் தென்னிந்தியாவுக்கு விஜயம் செய்தனர். அதுவரையில் தனியாக ஓரிரண்டு பேர்கள் மட்டும் பரத நாட்டியம் ஆடுவதையே பார்த்துவந்த தென்னிந்திய ரஸிகர்கள் மேற்படி நடன கோஷ்டிகளின் கதைப் போக்கான கோஷ்டி நடனத்தை மிக விரும்பி ஆதரிக்கத் தொடங்கினார்கள். அதன் விளைவாக தென்னிந்தியாவிலும் சில நடன கோஷ்டிகள் தோன்றலாயின.

இவ்விதம் தோன்றிய நடன கோஷ்டிகளில் ஒன்றுதான் நடராஜ்-சகுந்தலாவின் நடன கலா நிலையம்.

நடன கலா நிலையத்தின் அரங்கேற்றல் கச்சேரி சென்னை செயின்ட்மேரீஸ் ஹாலில் 15-4-44-ந் தேதியன்று நடைபெற்றது. சென்னை சித்திரக் கல்லூரி பிரின்ஸிபாலான ஸ்ரீ. ராய் சௌத்ரி தலைமை வகித்தார். அன்று அந்த முதல் கச்சேரியைப் பார்த்த அனைவரும் மிக சந்தோஷம் அடைந்து இந்தக் கோஷ்டி நீடூழி வாழ வேண்டுமென்று ஆசீர்வதித்தனர்.

அவர்கள் ஆசிர்வதித்தபடியே இந்தக் கோஷ்டி மளமள வென்று சில வாரங்களிலேயே முன்னணிக்கு வந்துவிட்டது. ஓயாமல் ஒழியாமல் தமிழ் நாடெங்கிலும் சென்று நடனமாடி பெருமிதமான பொதுஜன ஆதரவைப் பெறலாயிற்று. தமிழ் நாட்டில் மட்டுமென்ன, இலங்கைக்கும் 1945-ம் வருஷம் சென்று புகழ் மாலையுடன் திரும்பியது.

இலங்கை வாசிகள் நடராஜ்-சகுந்தலா கோஷ்டிக்குப் பிரமாதமான ஆதரவு காட்டி வரவேற்றார்களாம். அவர்கள் இக்கோஷ்டியினருக்கு அளித்த விருந்துகளுக்குக் கணக்கே யில்லையாம். கொழும்பில் உள்ள டவுன் ஹாலில் வாரத்திற்கு இருமுறையாக சில மாதங்கள் இக்கோஷ்டியினரின் நடனக் கச்சேரி நடந்தது.

நடராஜ்-சகுந்தலா கோஷ்டியினர் கொழும்புக்குப் போனாலும் போனார்கள்; அங்கு ஒரு பரபரப்பை உண்டு பண்ணி விட்டார்கள். இந்தக் கோஷ்டியார் புத்தர் பிரானின் கொள்கையை "நிர்வாணம்" என்ற நடனத்தில் அமைத்து ஆடிக் காட்டி வந்தார்களல்லவா? இந்த நடனத்தை இலங்கை பௌத்த மத சமாஜத்தினர் ஆடக்கூடாதென்று ஆட்சேபித்தார்களாம். புத்தர் பிரானை சிலை மூலமாகவோ, அல்லது சிலை போல ஒரு மானிடன் உட்கார்ந்து கொண்டோ காண்பிப்பது கூடாதென்றும், வேண்டுமானால் புத்தரை ஒரு ஜோதி ரூபத்தில் காட்

டலாமென்றும் அவர்கள் கூறினுர்களாம்.

இந்த சமாச்சாரம் பத்திரிகைகளிடையே இரு கட்சிகளை ஏற்படுத்திவிட்டதாம். ஒரு கட்சி புத்தரை சிலையாகக்காட்டுவதால் குற்றமில்லை என்றது. இன்னெரு கட்சியோ "கூடவே கூடாது" என்று பலத்த கிளர்ச்சியை ஆரம்பித்தது. வாதப் பிரதி வாதங்கள் பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்பின. இதன் விளைவாக நடராஜ்-சகுந்தலா கோஷ்டியினர் "நிர்வாண" நடனத்தை இலங்கையில் ஆடிக் காட்டாமலே திரும்ப வேண்டியதாயிற்று.

பொதுஜன ஆதரவையும், பிரமாதமான புகழையும் பெற்று விளங்கிய இந்தக்கோஷ்டி, 1946-ம் வருஷத்தில் திடீரென்று சிதறுண்டு போயிற்று. இதற்குக் காரணம் என்னவென்பதை அறிய நீங்கள் ஆவலுறுவீர்கள். நானும் இதே போல் ஆவல் கொண்டு சகுந்தலாவின் தகப்பனுரிடம் இது பற்றிக் கேட்டதற்கு அவர் பின்வரும் பதிலை அளித்தார்:—

"கம்பெனிக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதை நான் பூராவாக ஏத்றுக்கொள்ளுவது. லாபம் ஏற்பட்டால் ஸ்ரீ. நடராஜனுக்குப் பங்கு கொடுப்பது என்ற ஏற்பாட்டின்படி கம்பெனி நடந்து வந்தது. எங்களுக் கெல்லாம் நிறையப் புகழ் கிடைத்தது. ஆனுல் கம்பெனியோ நஷ்டத்திலேயே நடந்து வந்தது. இந்த நிலைமையி ஸ்ரீ. நடராஜ் திடீரென்று கம்பெனியிலிருந்து விலகி விட்டார். இன்றுவரை அவர் அதற்கான காரணத்தை எங்களுக்குத் தெரிவிக்க வில்லை" என்று கூறினுர்.

இந்தக் கோஷ்டி சிதறிப் போனது நாட்டிய ரஸிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்த தென்ருலும் சினிமா ரஸிகர்களுக்கு அதிர்ஷ்டமாக மாறியிருக்கிறது. நடன கோஷ்டி காரணமாக படத்தில் நடிப்பதைக் குறைத்துக் கொண்டிருந்த சகுந்தலா இப்பொழுது ஏககாலத்தில் மூன்று நான்கு படங்களில் நடித்து வருவது சந்தோஷிக்கத் தக்கதுதானே!

பில்ஹணா.


காரைக்கால் அம்மையார்.

குமாஸ்தாவின் பெண்

பதினேராவது வயதில் எடுக்கப்பட்ட சகுந்தலாவின் புகைப்படம்

கொழும்பு சமீபமுள்ள புத்தர் ஆலயத்தில் எடுக்கப்பட்ட படம். சகுந்தலா - நடராஜ்.

இப்பொழுது மூன்று நான்கு படங்களில் ஏககாலத்தில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் சகுந்தலா ஒரு காலத்தில் "சினிமாவில் எப்படியாவது தம் முகத்தைக் காட்டிவிட வேண்டும்" என்ற ஆசையுடன் பகிரதப் பிரயத்தனங்களைச் செய்தார். எண்ணற்ற போட்டோக்களையும், கடிதங்களையும் படக் கம்பெனிகளுக்கு அனுப்பி முயற்சித்ததெல்லாம் வீணாகவே முடிந்தது.

பற்பல ஏமாற்றங்களுக்குப் பிறகு அவர் "ஸ்வர்ணலதா" படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். சில மாதங்களுக்குப் பிறகு இப்படத்தின் கதாசிரியர், வசனகர்த்தா, டைரெக்டர் முதலியவர்கள் மாற்றப்பட்டு, ஒய். வி. ராவின் டைரெக்ஷனின் கீழ் படம் தயாராகவே, சகுந்தலாவின் கைக்கு எட்டிய முதல் சந்தர்ப்பமும் வாய்க் கெட்டாமல் போய் விட்டது.

இதனால் சகுந்தலா மனமுடைந்து போனார். சினிமா சந்தர்ப்பம் வரும் போது வரட்டும் என்று முடிவு செய்து கொண்டு, "சகுந்தலா நடன கோஷ்டி" என்ற பெயருடன் ஒரு கோஷ்டியைச் சேர்த்துக் கொண்டு, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய ஜில்லாக்களில் நடனமாடி வரலானார்.

நடனம் ஆடக் கற்றுக் கொள்ளுவதும் சதந்தலாவுக்கு சுலப சாத்தியமான காரியமாயிருக்கவில்லை. அவருடைய (ராஜகுல அஹமுடிய) ஜாதி ஆதசாரப்படி பெண்கள் பத்து வயதடைந்து விட்டால் தங்கள் வீட்டை விட்டு வெளியே வரவே கூடாதாம். சகுந்தலாவுக்கோ சிறு குழந்தையாக இருந்த போதே நாட்டியத்தில் ஆசை விழுந்தது. அதைக் கற்கவும் விரும்பினார். இதை அறிந்த அவருடைய உறவினர்களும், ஜாதியினரும் சீறி எழுந்தனர் ஜாதிப் பிரஷ்டம் செய்வதாகக் கூடப் பயமுறுத்தினர்கள். ஆனால் பிடிவாதக்காரரான சகுந்தலாவின் தகப்பனார் இதற்கெல்லாம் அஞ்சிவிடவில்லை. தம் செல்வப் பெண்ணான சகுந்தலாவை அவருடைய போக்கி

புத்தர் ஆலயத்தில் எடுக்கப்பட்ட மற்றோர் படம். சகுந்தலா, அவரது தகப்பனார், நட்ராஜ், இவர்களை வரவேற்ற எம். எஸ். ராஜு.

லேயே போகும்படி விட்டதோடு, கல்கத்தாவிலிருந்து வந்த எம். எஸ். பாபு என்பவர் மூலம் ஹிந்துஸ்தானி சங்கீதத்தையும், வட இந்திய நடனத்தையும் கற்றுக்கொள்ள அவர் ஏற்பாடு செய்தார். மூன்று வருஷ காலம் இந்த சிக்ஷை நீடித்தது. இந்த சிக்ஷை முடிந்த பின்னர்தான் அவர் சினிமாவில் நடிக்க முயற்சித்து, அது சாத்தியமில்லாமற் போகவே செட்டி நாட்டுப் பக்கங்களில் நடனக் கச்சேரி செய்ய முற்பட்டார்.

நடனத்தில் அவர் கொஞ்சம் பெயர் வாங்கி வந்ததை அறிந்த "சந்திரகுப்த சாணக்யா" படமுதலாளி அவரை தம் படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொண்டார். இப்படத்தில் சகுந்தலா ஹெலனின் தோழியாகத் தோன்றியிருக்கிறார். ஆங்கில நடனத்தையும் ஒரு கை பார்த்திருக்கிறார்.

"சாணக்யா"வுக்குப்பிறகு சகுந்தலா சென்னைக்கு வந்து, "நவீன விக்ரமாதித்தன்", "பரசுராமர்" ஆகிய படங்களில் நடனம் ஆடினார். பிறகு "பூலோக ரம்பை"யிலும், "வேணுகான"த்திலும் வேஷம் ஏற்று நடித்திருக்கிறார். ஆனால் அவருக்கு முதன் முதலில் கொஞ்சம் பெரிய வேஷம் கிடைத்தது "குமாஸ்தாவின் பெண்" படத்தில்தான். அவர் சினிமா ரஸிகர்களின் கவனத்தைக் கவர ஆரம்பித்ததும் இந்தப் படத்தின் மூலமாகத்தான்.

இதன் பிறகு "ஆர்யமாலா, ஆராய்ச்சிமணி, சிவகவி, காரைக்கால் அம்மையார், பூம்பாவை, பிரபாவதி, துளஸி ஜலந்தர்" ஆகிய படங்களிலெல்லாம் அவரைப் பார்த்திருக்கலாம். "காரைக்கால் அம்மையார்" படத்தின் போதுதான் அவரும் நடராஜனும் சந்திக்க நேர்ந்தது. அந்த சந்திப்பின் விளைவாக 'நடன கலா நிலையம்' தோன்[றி]யது. சுமார் மூன்று வருஷ கால[ம்] அவர்களிருவரும் சேர்ந்தே நடனம் ஆடி வந்தனர். முடிவில், குடும்பம் போல் நடந்துவந்த இக்கம்பெனி கலைந்து போனது வருந்தத் தக்கதே.

சகுந்தலாவின் சொந்த ஊர் சிவகெங்கை. ஆனால் அவருடைய பெற்றோர்கள் பெரும்பாலும் காரை[க்]

"துளஸி ஜலந்தர்" படத்தில் சகுந்தலாவின் தோற்றம்

குடியிலேயே வசித்து வந்தார்கள். அவரது தகப்பனுரான ஸ்ரீ. எஸ். பி. ஆறுமுகம் காரைக்குடி ஸ்ரீ. எம். எஸ். எம். எம். மெய்யப்பச் செட்டியாரிடம் கொஞ்சகாலம் டிரைவராயிருந்தார் பின்னர் சொந்தத்திலேயே சில மோட்டார்களை வாங்கி டாக்ஸி கம்பெனி நடத்தி வந்தார். அதோடுகூட விளையாட்டுச் சாமான்கள் விற்கும் ஸ்டோர் ஒன்றையும் நடத்தி வந்தார். இவருடைய மூத்த மனைவியின் புத்ரிதான் சகுந்தலா. இவருடைய சிற்றன்னையான எல். சரோஜாவும் சினிமாப் படங்களில் நடித்திருக்கிருர். "நவீன விக்ரமாதித்தன், பரசுராமர், பூலோக ரம்பை, வேணுகானம், ஆர்யமாலா, பூம்பாவை" ஆகிய படங்களில் அவர் நடித்திருக்கிருர். நடராஜ்-சகுந்தலா கோஷ்டியில் பின் பாட்டுப் பாடி வந்தாரே அவர் இதே சரோஜாதான்.

சகுந்தலா அக்ஷய வருஷம் (1926) தை மாஸம் 23-ந் தேதியன்று பிறந்தவர் அவருக்கு தற்போது கூடப் பிறந்தவர்கள் ஒருவரும் இல்லை. ஒரு தங்கையும், தம்பியும் பிறந்து சிறு வயதிலேயே இறந்து விட்டனர். சகுந்தலாவுக்கு சிறுவயதில் படிப்பில் அக்கரை ஏற்படவேயில்லை. அப்படியும் இப்படியுமாக நான்கு வகுப்புகளைக் கடந்தார். பின்னர் படிப்பை விட்டு விட்டு சங்கீதம் கற்கத் தொடங்கினர். தற்போது திரிச்சி ரேடியோவில் இருந்துவரும் மிருதங்கம் நடேச ஐயர் சங்கீதத்தில் ஆரம்ப சிக்ஷைகளை அவருக்குச் சொல்லி வைத்தார்.

பின்னர் "குமா[illegible]தாவின் பெண்" [illegible]தலிய படங்களில் [illegible]டித்துக் கொண்டி[illegible]ந்தபோது, கோய[illegible]த்தூரில் (பாலக்காடு [illegible]ம பாகவதரின் சிஷ்[illegible]ரான) காசி பாகவத[illegible]டம் கர்னுடக சங்கீத [illegible]க்ஷை பெற்ருர். தற்[illegible]பாது சகுந்தலா பிர[illegible]ல வழுவூர் ராமையா [illegible]ள்ளை அவர்களிடம் [illegible]ரத நாட்டியத்தைப் [illegible]யின்று வருகிருர்.

நாயாய் பிறப்பதானுலும்
நக்ஷத்திரத்தின் விட்டில்
பிறக்க வேண்டும்!

சினிமாப் படங்களுக்கேற்ற நல்ல முக அழகும், வாகான தேக அமைப்பும் பொருந்திய சகுந்தலா தற்போது முபாரக் கம்பெனியின் "பில்ஹணு"வில் கதா நாயகி சசிகலாவாகவும், "கிருஷ்ணபக்தி"யில் ருக்மணியாகவும், "ஜீவகனி"ல் அனங்க மாலையாகவும் நடித்துக் கொண்டிருக்கிருர். அடுத்த படியாக (சித்ரகலாவின்) "பாரிஸ்டரின் மகள்", "உஷா", "அனுர்கலி" ஆகிய தமிழ்ப்படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிருர். தற்போது நடித்துக் கொண்டிருக்கும் படங்கள் வெளி வந்தால் சகுந்தலா ஒரு முதல்தர நக்ஷத்திரத்தின் ஸ்தானத்தை அடைந்துவிடக் கூடும் என்று தாராளமாய் எதிர்பார்க்கலாம்.

இவ்வளவெல்லாம் விசாரித்துக் கொண்டபின் எனக்கு ஒரு விஷயம் சட்டென ஞாபகத்திற்கு வந்ததோ பிழைத்தேனே! இல்லையென்ருல், நேயர்கள் கேள்விகள் மூலம் என்னைக் குடைந்தெடுத்துவிட மாட்டார்களா?

சகுந்தலாவிடம் நான் கேட்டேன்:— "உங்களுக்கு விவாஹம் ஆகிவிட்டதா?" என்று.

சகுந்தலா புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டு சும்மா கீழ் நோக்கிப் பார்த்தார்.

உடனே பக்கத்திலிருந்த அவரது தகப்பனர், "ஆகப் போகிறது" என்ருர்.

"ஓ! மாப்பிள்ளை யாரோ?" என்று கேட்டேன்.

"எல்லாம் சொந்தத்திலே தான். என் தங்கையின் புத்திரன் பைரவ சுந்தரத்திற்குக் கொடுப்பதென்று நிச்சயமாகி யிருக்கிறது" என்ருர்.

"அப்படியானுல்ஒரு சாப்பாடு சமீபத்திலேயே இருக்கிறது!" என்றேன்.

"ஒருசாப்பாடென்ன; இரண்டாகத்தான்சாப்பிடுங்களேன்" என்ருர் சகுந்தலா, சிரித்துக் கொண்டே.

# தமிழ் ராம ராஜ்யம்

## ஸ்ரீ. மெய்யப்பனின் மகத்தான சேவை

ஒருவர் செய்வதையே இன்னொருவர் செய்யும் வழக்கம் பட உலகில்—அதுவும் தமிழ்ப் பட உலகில் அபரிமிதம். இந்த மோசமான வழக்கத்திற்கு விதி விலக்கானவர் ஸ்ரீ. ஏ. வி. மெய்யப்பன். சினிமாப் படத் தயாரிப்பில் அவர் சில அதிசய முறைகளைப் பரீக்ஷித்திருக்கிறார், கன்னட ஹரிச்சந்திராவை 'டப்பிங்' மூலம் தமிழ் ஹரிச்சந்திரா வாக்கி வெற்றி பெற்றார்; ஸ்ரீ வள்ளி படம் வெளிவந்த பின் பெரிய நாயகியின் பாட்டுகளை அதில் ஒட்டி அப் படத்திற்கு வெற்றி அளித்தார்—என்பதெல்லாம் பழைய விஷயங்கள். இந்த வெற்றிகளால் தூண்டப் பெற்ற அவர் மேலும் ஒரு முயற்சியில் ஈடுபட்டு ஒரு மகத்தான வெற்றியையும் பெற்றிருக்கிறார்.

கன்னடம், தெலுங்கு, மலையாளம், தமிழ் இந்த நான்கு பாஷைகளுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. அதோடுகூட பல பதங்களின் உச்சரிப்பு ஏறக் குறைய ஒரே மாதிரியிருக்கிறது. ஆனால் ஹிந்தி பாஷைக்கும் தமிழ் பாஷைக்கும் துளிக்கூட சம்பந்தமில்லை. இதை நினைத்த போது, ஹிந்தி ராம் ராஜ்யாவை எப்படித்தான் தமிழ்ப் படுத்தப் போகிறார்களோ என்ற சந்தேகம் என்னைப் போலவே பலருக்கும் ஏற்பட்டிருக்கும். ஆனால் ஸ்ரீ.மெய்யப்பன் அசகாய சூரர்; எடுத்துக் கொண்ட வேலையை அதி திருப்திகரமாய் முடித்து விட்டார். முயற்சி உடையோருக்கு சாத்தியமற்ற விஷயம் எதுவுமே இல்லை என்பதற்கு தமிழ் ராம ராஜ்யத்தை இனி ஒரு உதாரணமாய்க் கூறலாம்.

ஹிந்தி ராம் ராஜ்யா முன்பே தென்னாட்டில் பல ஊர்களில் ஓடி சிறந்த வெற்றியைப் பெற்றிருப்பதால் அப் படச் சிறப்பை அனைவரும் அறிந்திருக்கின்றனர். புராணப் படம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ராம் ராஜ்யா ஒரு மாதிரிப் படமாகும். இந்த உன்னதப் படத்தை ஹிந்தியில் பார்த்த போது சம்பாஷணைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லையே என்று பலர் வருத்தப் பட்டிருக்கின்றனர். அவர்களுடைய குறை தமிழ் ராம ராஜ்யத்தின் மூலம் தீர்ந்து விடும்.

ஒரு படத்தை அதன் பாஷையிலிருந்து வேறு பாஷைக்கு மொழி பெயர்ப்பதில் முக்கிய பொறுப்பு வசனகர்த்தாவைச் சேருகிறது. இந்தப் பொறுப்பை டி. குளத்து ஐயர் வெகு திறமையுடன் நிறை வெற்றியிருக்கிறார். ஹிந்தி வசனங்களின் அர்த்தம், பாவம், த்வனி உயர்வு தாழ்வு, வேகம் இவை கெடாதபடி தமிழ்ப் பதங்களைத் தேடிப் பிடித்து வசனம் அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆதலால் தமிழ் ராம ராஜ்யத்தின் வெற்றியில் முதல் பங்கு இவரைச் சேரும்.

திறம்பட எழுதப் பட்ட தமிழ் வசனங்களை ஹிந்தி நடிகர்களின் வாய

தமிழ்ப்படுத்தியவர்கள்:
**ஏ. வி. எம். ஸ்டுடியோ**

ஒலிப்பதிவு: **ஈ. ஐ. ஜீவா**
எடிட்டிங்: **எம். வி. ராமன்**

தமிழ் வசனம் & பாட்டுகள்:
**டி. குளத்து ஐயர்**

மேற்பார்வை:—**ஏ. வி. மெய்யப்பன்**

படத்தின் மூலடைரக்டர்: **விஜய பட்**

நடிகர்கள்:
**சோபனா சமர்த், பிரேம்அதிப், உமாகாந்த், பேபி கமலா, தாரா முதலியவர்கள்.**

"என்னப்பா, திடீர்னு தேகாப் பியாசத்திலே இறங்கிட்டே!"

"அதுங்களா, பொங்கலுக்குப் புதுப் படமெல்லாம் வருது. டிக்கெட்டு வாங்க உடம்புலே தெம்பு வேணும் பாருங்க,"

சைப்புத் தேற்றபடி பேசியவர்களின் திறமையும் போற்றத் தக்கதாகும். அண்மைக்காட்சிகளில்கூட வாயசைப்பும் உச்சரிப்பும் நன்கு பொருத்தப் பட்டிருக்கின்றன. இதில் உள்ள சிரமங்களை மனதில் வைத்துக் கொண்டால், சில இடங்களில் வாயசைப்பும் வசனமும் பொருந்தாமலிருப்பதை நாம் அவ்வளவாக பொருட்படுத்துவதற்கில்லை.

சீதைக்கு டி. எஸ். பகவதி குரல் இரவல் கொடுத்திருக்கிறார். சோபனா சமர்த்தே தமிழில் இனிமையாக பேசியிருக்கிறாரோ என்று சந்தேகிக்கும்படி அமைந்திருக்கிறது. வால்மீகிக்கு தேவ நாராயணன் குரல் கொடுத்திருக்கிறார். உதட்டசைப்பில் இம்மியளவு கூட வித்தியாசம் காண முடியாது. ராமருக்கு டி. பி. ராமச்சந்திரனும், லக்ஷ்மணருக்கு டி. கே. ராமச்சந்திரனும், வசிஷ்டருக்கு குளத்து ஐயரும், லவனுக்கு எஸ். லக்ஷ்மீ நாராயணனும், குசனுக்கு ஏ. கே. கணேசனும், வண்ணானுக்கு வி. கே. ராமசாமியும், வண்ணாத்திக்கு கே. ஆர். செல்லமும், சித்ரலேகாவுக்கு ஏ. எஸ். ஜயாவும், கௌசல்யாவுக்கு கிருஷ்ணம்மாளும், வாஸந்திக்கு சாவத்திரியும் குரல் இரவல் தந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே கூடிய வரையில் உதட்டசைப்புகளுக் கேற்பப் பேசியிருக்கிறார்கள்.

படத்தில் வசனங்களைப் போலவே பாட்டுகளும் நன்கு பொருத்தப் பட்டிருக்கின்றன. டி. கே. பட்டம்மாள், பி. ஜி. வெங்கடேசன் ஆகியவர்களின் பின்னணிப் பாட்டுகளும், படத்தில் உள்ளன. "எனக்குன் இருபதம்" என்ற ராமாயண கீர்த்தனையை பட்டம்மாள் புதிய ராகங்களில் இனிய ராகமாலிகையாய்ப் பாடுகிறார். ராமாயணக் காட்சிகள் நிழல் சித்திரங்களாய் காட்டப் படுகின்றன. இதுதான் இப் படத்தின் ஆரம்பக் காட்சியாகும். மொத்தத்தில், படத்தில் சங்கீத அம்சம் சிறந்து விளங்குகிறது.

இப் படத்தின் வெற்றியில் ஒலிப் பதிவாளருக்கும் நிறையப் பங்குண்டு, அவரது வேலை கவனத்துடனும், சுத்தமாகவும் செய்யப் பட்டிருக்கிறது.

தமிழ் ராம ராஜ்யம் ஸ்ரீ. மேனனின் சிறந்த வெற்றி என்று சொல்லி நிறுத்தி விடுவது மட்டும் போதாது. இப்படத்தின் மூலம் அவர் தமிழ்ப் பட உலகிற்கே ஒரு பெரும் சேவை செய்திருக்கிறார் என்பதையும் எடுத்துக் காட்டியாகவேண்டும். ராம் ராஜ்யா போன்ற படத்தை தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலுள்ள படரஸிகர்களனைவரும் பார்த்தார்களானால், 'புராணப் படத்தைக் கூட எவ்வளவு உன்னத முறையில் தயாரிக்க முடியும், ஆனால் நம் தமிழ்ப் பட முதலாளிகள் புராணக் கதைகளை எவ்வளவு கேவலமாய் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்' என்பதை கண்கூடாகத் தெரிந்து கொள்ளுவார்கள். பின்னர் அசம்பாவிதமாகத் தயாரிக்கப்படும் புராணப் படங்களுக்கு அவர்கள் படுதோல்வியை அளித்து அனுப்புவார்கள் என்பது நிச்சயம்.

ஜெயலக்ஷ்மி மதுரத்தின் சகோதரி அல்ல. மதுரத்துடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரிகளும், ஒரு சகோதரரும் ஆவர்.

**கே. வி. கிரி (பங்களூர்)**

சில ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் கடத்தப்பட்டுவந்த பிலிம் தேர்தல் ஏன் இப்பொழுது நடைபெறுவதில்லை?

இந்த அர்த்தமற்ற காரியத்தை அவ்வளவோடு நிறுத்தி விட்டதற்காக நீர் சந்தோஷப்படுகிறீரல்லவா?

**"கலாரஸிகன்" (திருநெல்வேலி)**

பாகவதர் நடிக்கும் ராஜமுக்தி படத்தை யார் டைரெக்ட் செய்கிறார்?

ராஜா சந்திரசேகர்.

**ஆர். சீதாராமன் (பரமக்குடி)**

இப்பொழுதெல்லாம் நம் படமுதலாளிகள் பழைய புகழ் பெற்ற நக்ஷத்திரங்களைப் போடாமல் புதிய நடிகைகளைப் போட்டுப் படம் பிடிப்பதன் மர்மம் என்ன?

இப்பொழுதுகூட நம் முதலாளிகள் பழைய நக்ஷத்திரங்களைப் போட்டுப் படம் பிடிக்கத் தயார்தான். ஆனால் அவர்கள் கம்பெனியின் மூலதனமாக வைத்துக் கொண்டிருப்பது பூராவையும் ஒரு நக்ஷத்திரத்திற்கே கொடுத்துவிட்டால் படம் எப்படித் தயாரிப்பது சொல்லும்!

**ஸி. வி. வி. ராகவன் (செங்கோட்டை)**

அம்பா பிலிம்ஸார் தயாரித்து வரும் பேசா மடந்தையில் எம். எஸ். சுப்புலக்ஷ்மி நடிக்கிறாரா?

இல்லையில்லை. இந்த எம் எஸ். சுப்புலக்ஷ்மி ஒரு பேசா-மடந்தை (எக்ஸ்ட்ரா)!

**எஸ். சிவம் (பதுளை, இலங்கை)**

ஒய். வி. ராவ் தமிழரா, தெலுங்கரா?

அவர் தென்னாட்டிலிருந்து ஒரு தமிழ் நடிகையை வடநாட்டுக்கு அழைத்துச் சென்று ஒரு ஹிந்திப் படத்தைத்தயாரிக்கும் ஒரு தெலுங்கரா வார்!

**எ. எம். ஸ்வாமி (சென்னை)**

என். எஸ். கிருஷ்ணன் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்? காங்கிரஸ் கட்சியா? திராவிடக் கட்சியா?

இப்பொழுது அவர் சிரமப்பட்டு வருவதெல்லாம் இந்த உண்மை பொது ஜனங்களுக்குத் தெரிந்து விடாமலிருப்பதற்காகத்தான்!

**டி. கே. சபாபதி (பேரணாம்பட்டு)**

மின்னல் கொடி, ஜெயக்கொடி முதலிய படங்களில் நடித்த கே.டி. ருக்மணி இப்பொழுது எப்படத்தில் நடிக்கிறார்?

இந்தக் "கொடி" ருக்மணி முன்பு பல படங்களில் திடீர் திடீர் என்று தோன்றி ஆச்சரியங்களை உண்டு பண்ணி வந்தார். அது போலவே பல வருஷ அஞ்ஞாத வாசத்திற்கு பிறகு "பொன்னுருவி" படத்தில் திடீரென்று தோன்றி நம்மைத் திகைக்க வைத்தார். பின்னர் இவரைப் போட்டு ஒரு "புரட்சி" யை உண்டு பண்ண நினைத்த கம்பெனியையே "புரட்(டு)சி!" என்று சொல்லும்படியாகிவிட்டது இப்பொழுது.

**ஆர். ராகவன் (பள்ளத்தூர்)**

நாம் இருவர் படத்தில் பேபி கமலா சொந்தக் குரலில் பாடியிருப்பதாக நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். ஆனால் அவர் ராஜேஸ்வரி என்பவரின் குரலை இரவல் வாங்கிக் கொண்டிருப்பதாக என் நண்பர் கூறுகிறாரே?

அந்தப் பாட்டுகளைப் பாடியிருப்பவர் ராஜேஸ்வரிதான். ஆனால் குற்றத்திற்கு நான் பொறுப்பாளி அல்ல. வாழ்க்கை வர்ணனையில் நீர் படிக்கும் விஷயங்களெல்லாம் அவரவர்கள் கூறுவதை வைத்துக் கொண்டே எழுதப்படுகிறது.

**கே. எஸ். மணி (வத்தலகுண்டு)**

"ராம் ராஜ்யா" போன்ற நல்ல ஹிந்திப் படங்களுக்கு தமிழ் வசனம், பாட்டு முதலியவற்றைச் சேர்த்து வெளியிடுவதுபோல் நல்ல ஆங்கிலப் படங்களுக்கும் தமிழ் பாட்டு, வசனம் ஆகியவற்றைச் சேர்த்து வெளியிடுவார்களா?

**இந்த மாதிரி செய்ய முன்பே முனைந்து விட்டார்கள் ஹாலிவுட் படமுதலாளிகள். ஆதலால் "பொன்னுருவி," "ருக்மாங்கதன்" போன்ற "ஒட்டை"ப் படங்களில் ஆங்கில சம்பாஷணைகளை அமைத்து வெளி நாட்டிற்கு அனுப்பி நாம்பழி வாங்கலாம்!**

ஏ. கே. சித்திக் (திகனே, இலங்கை)

டி. ஆர். ராஜகுமாரியும், டி. ஆர். மஹாலிங்கமும் அக்காவும் தம்பியுமா?

**இல்லை. ஆனால் 'பவழக் கொடி" படத்தில் இருவரும் சதிபதிகளாய் நடிக்கப் போகிறார்கள்.**

ஜே. மார்க் (பங்களூர்)

தற்போது எம். கே. டி. பாகவதர் எந்தெந்தப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்?

**தம் சொந்தப் படமான "ராஜமுக்தி" ஒன்றில் மட்டும்தான்.**

எஸ். ஜெயராமன் (திண்டிவனம்)

விகடயோகியில் நடித்த எஸ். எம். குமரேசனும், பி. எஸ் சரோஜாவும் வேறு எந்தப் படத்திலாவது சேர்ந்து நடிக்கிறார்களா?

**"தன அமராவதி"யில் அவர்களை நீர் சேர்ந்தே பார்க்கலாம்.**

**டி. ரங்கநாதன் (சேலம்)**

சில சினிமா நக்ஷத்திரங்களின் பெயர்களுக்கு முன்னால் "குமாரி" என்ற பதம் சேர்க்கப் பட்டிருக்கிறதே; அதன் அர்த்தம் என்ன?

**"குழந்தைப்" பருவம் "மாறி" விட்டது என்பதைக் குறிப்பதற்காக இப்பதத்தைச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள் போலும்!**

**"ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி"யில் ஆர். பத்மாவும் எம். ஆர். சுவாமிநாதனும்**

---

**ஆர். எம். ராமநாதன் (வேகுப்பட்டி)**

தவமணி தேவிக்கு வயது என்ன ஆகிறது?

**அவர் பத்திரிகாசிரியர்களைப் பற்றிக் குழந்தைத் தனமாய் ஏதோ உளறிக் கொண்டிருந்தாலும், வயதென்னவோ கிட்டத் தட்ட முப்பது ஆகிறது!**

**தி. அ. இராமசாமி (பண்ருட்டி)**

சினிமா நடிகைகள் "பேபி"யிலிருந்து "குமாரி" ஆகிறார்களே? குமாரி ஆனபின் என்ன ஆகிறார்கள்?

**குமாரி ஆனபின் கோட்டான் ஆகி 'ரிடையர்' ஆக வேண்டியதே நியாயம். ஆனால் தமிழ்ப் படவுலகில் நியாயத்திற்குத் தான் இடம் கிடையாதே!**

**பி. ஜே. சுகுணன் (ராயபுரம்)**

பணத்தையே குறியாகக் கொண்ட பட முதலாளிகளையும், ஆபாசக் கட்டங்களைத் தயாரிப்பதிலேயே தங்கள்

மூளையைச் செலவிடும் டைரெக்டர்களையும் சீர்திருத்துவது எங்ஙனம்?

**இவர்களுடைய படங்களை ஜனங்கள் பார்க்காமலிருப்பதே சிறந்த வழி.**

மணி நாயர் (உரிகம்)

குமாரி ருக்மணி எங்கள் ஊருக்கு மயில டான்ஸ் ஆட வருவாரா?

**இந்தப் பெண் மயில் இப்பொழுது பல நூறு மைல்களுக்கப்பால் (கல்கத்தாவில்) படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறது. திரும்பி வந்ததும் கேளும்.**

கே. என். ராம மூர்த்தி (மதுரை)

கொல்லபாமாவில் நடிக்கும் கிருஷ்ணவேணி இதற்கு முன் படங்களில் நடித்திருக்கிறாரா? எந்த ஊரைச் சேர்ந்தவர்? தெரிவிக்க முடியுமா?

**கிருஷ்ணவேணி சோபனசலா ஸ்டுடியோவின் பலதெலுங்குப் படங்களில் முன்பே நடித்திருக்கிறார். ஆந்திர தேசத்தைச் சேர்ந்தவர். அவரது விலாஸம்: c/o சோபனசலா ஸ்டுடியோஸ், தேனாம்பேட்டை, சென்னை.**

எம். ஏ. ஜகன்னாதன் (பம்பாய்)

"மனோன்மணி"யில் நடித்துள்ள பபூன் ஷண்முகத்தின் சொந்த ஊர் எது?

**மதுரை.**

வேம்பு (சென்னை)

என் மகனில் பூ.ஆர். ஜீவரத்தினம் என். கிருஷ்ண மூர்த்தியிடம், "கொடிக்கு எப்படி கொம்பு அவசியமோ, அது போல என் வாழ்க்கைக்கு......" என்று சொல்கிறாரே? இதன் மர்மம் என்ன?

**"......அது போல என் வாழ்க்கைக்கு வெங்கடசாமி அவசியம்" என்று சேர்த்துக் கொண்டு விட்டீரானால் மர்மம் மறைந்து போகிறது.**

ஆர். நாதன் (கொண்டித்தோப்பு)

பி. யு. சின்னப்பா, ஏ. ஆர். சகுந்தலாவை மணந்து கொண்டபின் சகுந்தலா பல வருஷங்கள் படங்களில் நடிக்காமலிருந்து விட்டு இப்பொழுது ஏதோ படத்தில் நடிக்கிறாராமே? அது எந்தப் படம்?

**சின்னப்பா மணந்து கொண்டிருப்பவர் ஏ. ஆர். சகுந்தலா அல்ல; ஏ. சகுந்தலா ஏ. சகுந்தலா எந்தப் படத்திலும் நடிக்கவில்லை.**

கே. சங்கரன், (கும்பகோணம்)

சுதர்சன் படத்தில் முதலில் எம். எல். வஸந்த குமாரி நடித்து வந்தாரே? பிறகு ஏன் அவருக்குப் பதில் கண்ணாம்பாவை ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்?

**படம் கொஞ்சம் தயாரிக்கப் பட்ட பின் வஸந்த குமாரியை விட, கண்ணாம்பா அந்த பாகத்தைத் திறம்பட நடிக்கக் கூடும் என்று ராயல் டாக்கீஸாருக்குத் தோன்றியதுதான் காரணம்.**

கு. ஊ. கு. ராஜாராம் பாண்டியன் (கமுதி)

டி. ஆர். ராமச்சந்திரனுக்கு தற்போது என்ன வயது? எது வரைப் படித்திருக்கிறார்?

**ராமச்சந்திரனுக்குத் தற்போது வயது 31 முடிந்து கொண்டிருக்கி**

**கிருஷ்ணா பிக்சர்ஸாரின் "கிருஷ்ண பக்தி"யில் பாமாவும், கிருஷ்ணனும் பெரியநாயகி, கே. ஆர். ராமசாமி.**

"பக்த கும்பரா" கன்னடப் படத்தில் பண்டரிபாய் இப்படி ஒரு காட்சியில் தோன்றுகிறார்,

றது. நான்காவது வகுப்பு வரையில் படித்திருக்கிறார்.

டி. எம். இப்ரஹீம் (அபுதளை, இலங்கை)

நாம் இருவரில் நடிக்கும் பேபி கமலாவை என் கல்யாண வைபத்தில் நாட்டியம் ஆட அழைத்தால் வருவாரா?

**அவர் கேட்கும் பணத்தைக் கொடுத்தால் வராமலென்ன? ஆனால் அவருடைய நாட்டியத்தை நீர் உண்மையிலேயே நேரில் ரஸிக்க விரும்பினால் அதற்கு உம்முடைய கலியாண வைபவம் சிறந்த சந்தர்ப்பமாயிருக்காதே என்றுதான் யோசிக்கிறேன்.**

கே. சுப்ரமணியன் (பங்களூர்)

32 வயதிற்குள் தாங்கள் எப்படி முன்னுக்கு வந்தீர்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா?

**இது மட்டும் தெரிந்திருந்தால் அதை உமக்கு இதற்கு முன்பே தெரிவித்திருப்பேனே!**

ஆர். சுப்பையா (சிவகங்கை)

துளஸிஜலந்தர் படத்தில்செம்படவனாக நடிக்கும்போது டி. எஸ். துரைராஜ் ஜரிகை வேஷ்டி கட்டிக்கொண்டிருக்கிறாரே? செம்படவனுக்கு ஜரிகை வேஷ்டி எங்கே கிடைத்தது?

**வரும் வழியில் துஷ்யந்த மஹாராஜாவை அந்த செம்படவன் சந்தித்திருக்கக் கூடும்!**

வி. வி. நாராயணன் (காரைக்குடி)

கஞ்சன் படம் கன கச்சிதமாக இருந்தும் ஜனங்களின் ஆதரவுமட்டும் ஏன் அதிகமாய் இல்லை?

**ஆதரவு விஷயத்தில் கஞ்சனிடமே தங்கள் கஞ்சத்தனத்தைக் காட்டிவிட நினைக்கிறாப் போலிருக்கிறது அவர்கள்!**

எம். எஸ். கிருஷ்ணமூர்த்தி (சென்னை)

கன்னிகாவில் நடிக்கும் டி. ஈ. வரதன் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்?

**அவர் ஸ்ரீ வைஷ்ணவ ஜாதியைச் சேர்ந்தவர்,**

பி. எஸ். கோபன் (சேலம்)

என். எஸ். கிருஷ்ணன். டி. ஆர். ராமச்சந்திரன் இவ்விருவர் நடிப்பில் யாருடைய நடிப்பு பிரமாதமானதாக இருக்கிறது?

**என். எஸ். கிருஷ்ணன் முன்பு சில படங்களில் பிரமாதமாய் நடித்துள்ளவர். டி. ஆர். ராமச்சந்திரன் சமீபத்தில் சில படங்களில் பிரமாதமாய் நடித்திருக்கிறார்.**

எம். எஸ். மணியம் (குமாரபுரம், தோப்பூர்)

தற்காலம் நடிக நடிகைகள் கலைக்காகப் பாடுபடுகிறார்களா? அல்லது காசுக்காகவே உழைக்கிறார்களா?

**சினிமா உலகில் ஈடு பட்டிருப்பவர்கள் சினிமாவை வாய் தவறிக் கூட "கலை" என்று சொல்வதில்லையென்பது உமக்குத் தெரியாதா?**

வி. எஸ். கோபால்ராவ் (தர்மபுரி)

நீங்கள் "பட்டை 1—ஊசி 3"—என்று வெளியிடுகிறீர்கள், ஒரே ஊசி

யால் பல பட்டை நூலைத் தைத்து விடலாம். ஒரு பட்டை நூலைத் தைப்பதற்கு 12 ஊசிகள் அவசியமில்லை. ஆதலால் இனி "ஊசி 1—பட்டை 4" இது போல மாற்றி வெளியிடுவீர்களா?

**நீங்கள் குறிப்பிடுவது தையல் ஊசியையும் நூல் பட்டையையும். ஆனல் நான் குறிப்பிட்டுவருவதோ குண்டூசிப் பட்டையை.**

"சூரியன்" (கண்டனூர்)

தமிழில் இது வரை மொத்தம் எத்தனை படங்கள் வெளிவந்திருக்கும்?

**சுமார் 450 படங்கள்.**

"தூள் பகோடா" (கொடைக்கானல்)

விசித்திர வனிதா படம் எப்பொழுது வெளிவரும்?

**படமென்னமோ பல நாட்களுக்கு முன்பே முடிந்து விட்டது. வெளிவருவதுதான் எப்பொழுது என்று தெரியவில்லை.**

பட்டுசாமி (சிங்கனூர்)

"நடிகர் தேவை" என்ற விளம்பரத்தைப் பார்த்து விட்டு அந்தக் கம்பெனிக்கு விண்ணப் பித்துக் கொண்டேன். அவர்கள் விண்ணப்ப பாரம், பதிவுக் கட்டணம் முதலியவைகளுக்காக ரூ. 4 அனுப்பச் சொன்னர்கள். அதன் படியே அனுப்பினேன். ஆனல் அதன் பின் பதிலே யில்லை. இப்படிப் பொது ஜனங்களை இவர்கள் ஏமாற்றலாமா?

**ஒருவரை ஒருவர் ஏமாற்றுவது தானே, ஸ்வாமி, தற்கால நாகரீகம்! ஏமாற்றியது குற்றம் என்று சொன்னல், "உம்மை யாரய்யா ஏமாறச் சொன்னது?" என்று கேட்பார்கள்!**

ஆர். குப்புசாமி (குறிஞ்சிப்பாடி.)

வேலைக்காரி படம் ஏன் இன்னும் வெளிவர வில்லை?

**அவளுடைய வேலை இன்னும் முடிவடையாததனுல்தான்.**

பி. சிவம் (கல்கத்தா)

(யோக) மங்களம் முதலில் எந்தப் படத்தில் தோன்றினர்? ஏதேனும் ஹிந்திப் படங்களில் நடித்திருக்கிருரா?

**மங்களம் முதன் முதலில் தோன்றியது "ஜகதலப்ரதாபனி"ல். "கர்ண" ஹிந்திப் படத்தில் அவர் நாட்டியம் ஆடியிருக்கிருர்.**

ஏ. சி. பிள்ளை (கொழும்பு)

டி. ஆர். மாஹாலிங்கம் சிறிய ஒரு பாட்டுக்கும் பெரிய ஒரு இழுப்பு இழுப்பானேன்?

**அவருடைய கண்டம் கட்டுக் கடங்காமல் புரண்டோடுவது இதற்குக் காரணமாயிருக்கலாம்!**

"திருவோனம்" (திருநெல்வேலி)

பைத்தியக்காரன் படத்தில் சுயமரியாதைக் கட்சியை பகிரங்கமாக ஆதரிக்கும் என். எஸ். கிருஷ்ணன் சிலை, தெய்வம் முதலியவைகளை வணங்குவதேன்?

---

**"ஸ்ரீ வள்ளி" புகழ் செளதாமினி இப்பொழுது திரன் கம்பெனியாரின் "கோகுல தாசி" தமிழ்ப் படத்தில் நடித்துவருகிருர்.**

உண்மைக்கும், நடிப்பிற்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்டுவதற்காகப் போலும்.

டி. வி. கோவிந்தராஜன் (உறையூர்)

நான் நடிகர் ஸ்ரீவைப்பார்க்கப் போனேன். உள்ளே இருந்து கொண்டே "இல்லை" என்று சொல்லி அனுப்பி விட்டார். இப்படிச் செய்தது சரியா?

முன்னுக்கு வந்துள்ள நக்ஷத்திரங்களில் சிலர் இப்படி கதவுக்குப் பின்னுலிருந்து கொண்டு நடந்து கொள்ளுவது உமக்கு முன்பே தெரிந்திருக்க வேண்டுமே!

ஜி. பிரகாசம் (கொழும்பு)

இவ்வருஷத்தில் வெளியான படங்களில் நாம் இருவர் சிறந்து விளங்குகிறது. எனினும் அதில் வரும் "கோடையிலே" என்ற பாட்டை நீக்கி விட்டால் படம் மேலும் நன்ருயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

இதற்குப் பதில் சினிமாப் படம் தயாரிக்கும் காட்சிகளை நீக்கி விட்டால் நன்ருயிருக்கும் என்று நான் நம்புகிறேன்.

என். கன்னியப்பன் (மீர்சாகிப் பேட்டை)

கன்னிகா படத்தில் டி. ஈ. வரதன் பாடுவது சொந்தக் குரலிலா அல்லது இரவல் குரலிலா?

வரதனுக்கு சுமாராகப் பாடவரும் என்று கேள்வி. ஆனல் அந்தப் படத்தில் பாடியிருப்ப தென்னவோ இரவல் குரலில்தான்.

ங்கையா (சூரன்குடி)

பல படங்களில் பட முதலாளிகள் ...ாரதர் வேஷங்களுக்கு பெண்களைப் போட்டிருப்பது எதன் காரணமாக?

...ளர் வப்பு அளப்பதில் ஆண்களை விட பெண்களே தேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தால் என்று சொல்வது பொருந்தும்!

டி. எஸ். பாண்டியன் (தென்காசி)

மஹாத்மா உதங்கர் படத்தில்நடிக்கும் விஜய குமாரி இதற்கு முன்னுல் ஏதேனும் படத்தில் நடித்திருக்கிருரா?

இல்லை.

மு. முசின் (அம்பலான் கொட)

எம். கே. ராதா தற்போது எந்தப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிருர்?

ஜெமினியின் "சந்திரலேகா" படத்தில்.

கே. சிவகுரு (திரிகோணமலை)

ஏ. ஆர். சகுந்தலா, என். ஆர். சகுந்தலா, ஏ. சகுந்தலா ஆகியோர் யார் யார் என்பதை அடையாளத்துடன் குறிப்பிடவும்.

நாட்டியப் புகழ் பெற்று தற்போது "பில்ஹணு" தமிழ்ப் படத்தில் நடிப்பவர் ஏ. ஆர். சகுந்தலா. சமீபத்தில் "தெய்வ நீதியில்" நடித்திருப்பவர் என். ஆர். சகுந்தலா. சி... படங்களில் நடித்து விட்டு சின்னப்பாவை மணந்து கொண்டு படத்தொழிலிலிருந்து விலகியிருப்பவர் தான் ஏ. சகுந்தலா.

எஸ். வெங்கடாசலம் (திருவனந்தபுரம்)

ஹரிதாஸ் படத்தில் சின்னப்பா நடித்திருந்தால் அது இவ்வளவு வெற்றி பெற்றிருக்குமா?

அது கிடக்கட்டும்; "ஆர்யமாலாவில்" பாகவதர் நடித்திருந்தால் அது எப்படியிருக்கும் என்பதை நீர் சொல்லும் முதலில்.

என். ராஜேந்திரன் (சேலம்)

என் நண்பர் ஒருவர் "சினிமா"வில் சேர விருப்புகிருர் அவர் நன்ருய்ப் பாடக் கூடியவர். ஆனல் அவருடைய கண் ஒன்று மட்டும் பக்கப் பார்வையாயிருக்கும். அவரைச் சேர்த்துக் கொள்ளுவார்களா?

அதிர்ஷ்ட தேவதை பக்கப் பார்வையாகப் பார்க்கத் தொடங்கினலே போதும் உம் நண்பருக்கு, (கே. ஸி. டேயைப் போல) குருட்டு அதிர்ஷ்டம் அடிக்க ஆரம்பித்துவிடும்!

டி. வி. அருணசலம் (தூத்துக்குடி)

தென்னிந்தியப் படவுலகில் சிறந்த டைரெக்டர் யார்?

பி. என். ரெட்டி.

# செய்திப் படங்கள்

டி. கே. எஸ். சகோதரர்கள்
நடிக்கும் "பில்ஹணனி"ல்
எம். எஸ். திரௌபதி

நிரன் கம்பெனியின்
"கோகுலதாஸி" படத்தில
ஹொன்னப்பா

"கோகுலதாஸி."
படத்தின் கதாநாயகி
எம். வி. ராஜம்மா

இடது
" சிவயோ
சாரங்கப
வலது
"ராமதாஸ்
குமாரி கு



இடது
" குடும்ப
தமிழ்
சந்திரஹாச
டி. ஆர். என்

" ஆயிரம்
அபூர்வ சிந்
எம். ஆர்.
வி. என்
எஸ். வ

...ம் :
...'' யில்
... சுரபி.
...ம் :
...'' படத்தில்
...க்மணி

...ம
...வாழ்க்கை''
...த்தில்
..., பார்வதி,
... ராகவன்,

...கலைவாங்கி
...மணி'' யில்
...வாமிநாதன்,
... ஜானகி,
...லக்ஷ்மி

கந்தர் பில்ம்ஸின்
" ஷண்பகவல்லி " படத்தில்
டி. எஸ். பாலய்யா

"ஷண்பகவல்லி"யில்
தோன்றும் ஸ்ரீ நடனகலாமணி
ஏ. என். பெரியநாயகி

வெளியூர்களில் இப்போது ஓடிக்கொண்டிருக்கும் "மதனமாலா" தமிழ்ப் படத்தில் எம். வி. மணியும், வி. ராஜலக்ஷ்மியும்.

## பொங்கல் நற்செய்தி!

ஸ்ரீ சீதாராமா பிலிம்ஸார்
தயாரித்துவரும்

# குடும்ப வாழ்க்கை

உன்னத தமிழ் சமூகப் படம்

★

கதை—வசனம்

**வைரம் அருணாசலம் செட்டியார்**

டைரெக்‌ஷன்:

**ஏ. டி. கிருஷ்ணஸ்வாமி**

சங்கீத டைரெக்‌ஷன்: குன்னக்குடி

பாட்டு: உடுமலை நாராயண கவி

**ஸ்டுடியோ—பிரகதி**

விவரங்களுக்கு

**ஸ்ரீ சீதாராமா பிலிம்ஸ்,**

கரீம் ரோடு - ஆயிரம் விளக்கு - சென்னை

# நுனிப்புல்

வெட்டுக்கிளி

பொது ஜனங்கள் கூடியுள்ள இடங்களிலோ, பஸ்ஸிலோ, ரயிலிலோ பிரபலமாயுள்ள ஒரு நக்ஷத்திரத்தின்பெயரை பிறருக்குக் கேட்கும்படி கூறிவிட்டாலோ அல்லது படித்துவிட்டாலோ போதும். உடனே அங்குள்ள அந்த நக்ஷத்திரங்களின் "விசிறிகள்" கூர்ந்து கவனிக்க ஆரம்பிப்பார்கள். சில தினங்களுக்குமுன் நான் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்த பொழுது, வயது முதிர்ந்த ஒருவர், தம் கையிலிருந்த பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தார். "சென்னையில் ராஜகுமாரி..." என்று அவர் உரத்த குரலில் நீட்டிப் படிக்க ஆரம்பித்ததுதான் தாமதம்; "ராஜகுமாரிக்கு என்ன?" என்று கேட்பது போல் பல முகங்கள் ஆவலுடன் அவர் பக்கம் திரும்பின. ஆனல் அந்தக் கிழவரோ "அம்ருத கௌரி விஜயம்" என்று முன்போலவே சாவதானமாய்ப் படித்து முடித்தார்! அடேயப்பா, அந்த "விசிறி"களின் முகங்களில் அசடு வழிந்ததைப் பார்க்கணுமே!

* * *

இதேபோல சில சினிமாச் செய்திகள் அரசியல் விஷயங்களைப்படிப்பவர்களையும் திகைக்க வைப்பதுண்டு. சமீபத்தில், "பர்மா ராணிக்குத் தடை" என்ற செய்தித் தலைப்பைப் படித்த சிலருக்கு கொஞ்சம் திகைப்பு ஏற்பட்டிருக்கக் கூடும். "பர்மாவுக்கு ராஜா ஏது? ராணி ஏது? அந்த ராணிக்குத் தடை ஏன்?" என்று அவர்கள் ஒரு நிமிஷம் மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

* * *

சமீப காலமாக பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கும் ஒரு விளம்பரத்தைப் பார்த்து சில பட முதலாளிகள் முதலில் ஏமாந்து போய் விட்டார்களாம். காரணம் இந்த விளம்பரங்களில் "ப்ரொட்யூஸர்களுக்கு" என்று கொட்டை எழுத்தில் காணப்படுவதுதான். மேலும் சில வரிகளைப் படித்த பின்னர்தான், இவ்விளம்பரம் குறிப்பிடுவது சினிமா உற்பத்தியாளர்களை அல்ல; தானிய உற்பத்தியாளர்களை என்று விளங்குகிறது!

* * *

சாதாரணமாக அரசியல் விஷயங்களுக்கே பிராதான்யம் கொடுத்து வரும் தினசரிப் பத்திரிகைகள் சிலவற்றிற்கு, சினிமா ரசிகர்களுக்கும் சூடான செய்தி கொடுக்கவேண்டும் என்ற கருணை திடீரென்று ஏற்பட்டு விடும். அவர்கள் போஸ்டர்களில் "சினிமா நடிகை கொலை", "பிரபல சினிமாநக்ஷத்திரத்தின் மீது கிரிமினல் வழக்கு", "நடிகை விவாஹ ரத்து" என்பது போன்ற தலைப்பைப் போட்டு வைப்பார்கள். இதைப் பார்க்கும் சினிமா ரசிகர்கள் தங்கள் அபிமானத்திற்குப் பாத்திரமாயுள்ள நக்ஷத்திரத்திற்கே இந்த ஆபத்துகள் ஏற்பட்டிருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு அவசர அவசரமாகப் பேப்பரைவாங்கிப் படிப்பார்கள். அன்றை

யதினம் வழக்கமாகப்பத்திரிகை படிப்பவர்களுக்கோ பத்திரிகை இல்லாமலும் போகும். கடைசியில் பார்க்கப்போனால், மேற்குறிப்பிட்ட தலைப்புகள் எங்கேயோ ஹாலிவுட்டில் அநாமதேயமாயுள்ள ஒரு 'எக்ஸ்ட்ரா'வைப் பற்றியதாய் இருக்கும்!

* * *

சில வருஷங்களுக்கு முன் ஒரு பிரபல வாரப் பத்திரிகையின் ஆசிரியரின் பிரபல புனைப் பெயரை மட்டும் போட்டு, அதனுடன் "இறந்தார்" என்றும் சேர்த்து போஸ்டரை வெளியிட்டது ஒரு தினசரிப் பத்திரிகை. அன்றைய தினம் அந்த தினசரியை வாங்கியோ அல்லது இரவலாகவோ பார்க்காதவர்களே இல்லை எனலாம். ஆனால் உண்மையில் பிரஸ்தாப வாரப் பத்திரிகையின் ஆசிரியர் உயிருடனேயே இருந்தார்! அவருடைய புனைப் பெயரை வைத்துக் கொண்டிருந்த யாரோ ஒரு செட்டியாரின் மரணச் செய்தியை வைத்துக் கொண்டே அந்த தினசரி ஆசிரியர் இந்த ஜகஜ்ஜாலத்தைச் செய்தார் என்பது பின்னர் வெளிப்பட்டது!

* * *

போஸ்டர் வாக்கியங்கள் மட்டுமென்ன, தினசரியில் விவரமாக வெளி வந்துள்ள முழுச் செய்திகள் கூடச் சில சமயங்களில் குழப்பத்தை உண்டு பண்ணியிருக்கின்றன. சென்ற முறை காங்கிரஸ் சத்தியாக்கிரஹம் அதி மும்முரமாய் இருந்த போது, "திருவெண்காடு டி. வி. சுப்ரமணியம் கைதியானார்" என்ற ஒரு செய்தி தினசரிகளில் வெளிவந்தது. அதைப் பார்த்தவர்களெல்லாம், இதே ஊர், முதலெழுத்துகள், பெயர் எல்லாம் ஒருங்கே பொருந்திய பிரபல நாதஸ்வர வித்வான்தான் ஜெயிலுக்குப் போய்விட்டதாக நினைத்துவிட்டார்கள். இதன் விளைவாக சுமார் ஒரு வருஷ காலம் வரையில் அந்த வித்வானை கச்சேரிக்குக் கூப்பிடுவாரில்லாமல் போய்விட்டதாம்!

"மஹாலிங்கத்திற்கு மணம்" என்ற தலைப்பை வாசகர்கள் படிப்பதாய் வைத்துக் கொள்ளுவோம். சினிமா விஷயத்தில் அக்கரை உடையவர்களுக்கு, சினிமா நடிகர் டி. ஆர். மகாலிங்கத்தின் ஞாபகமே வரும். ஆனால் சங்கீத ரசிகர்களுக்கோ புல்லாங்குழல் வித்வான் டி. ஆர். மஹாலிங்கத்தின் ஞாபகமே ஏற்படும். இந்த இரண்டு கலைகளிலும் பரிச்சயமுள்ளவர்களோ "எந்த மஹாலிங்கத்திற்கு?" என்று கேட்பார்கள். ஆனால் இந்தச் சங்கதி மேற்படி இரண்டு மஹாலிங்கத்தையுமே குறிப்பிடாமல் எங்கோ கோயில் கொண்டுள்ள ஒரு மஹாலிங்கக் கடவுளின் திருமணவிழாவைப் பற்றியதாய் இருந்தால் மேற்சொன்ன மூன்று தரத்தாருக்கும் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்!

* * *

இன்னொரு தமாஷைக் கேளுங்கள். ஒரு நாள் சாயந்திரம் (சென்னை) யானைகௌனியிலுள்ள ஒரு வீட்டின் முன் பலர் நின்றுகொண்டு 'கசமுச' என்று பேசிக்கொண்டிருந்தார்கள். அவ்வழியே சென்று கொண்டிருந்த நான் விஷயம் என்னவென்று விசாரித்தேன். அவர்களில் ஒருவர் அந்த வீட்டின் முன் தொங்கிய ஒரு பெயர்ப் பலகையைக் காண்பித்தார்கள். அதைப்பற்றி நான் "ஏன், அதற்கென்ன? டாக்டர் சின்னப்பா என்று எழுதியிருக்கிறது?" எனக் கூறி முடிப்பதற்குள், "ஓஹோ!" என்று கூறிக்கொண்டே ஒவ்வொருவராக நகர ஆரம்பித்தனர். விஷயம் என்னவென்றால், அரைகுறையாக ஆங்கிலம் தெரிந்த எவனோ, "டாக்டர் சின்னப்பா" என்ற பெயரை "ஆக்டர் சின்னப்பா" என்று மொழி பெயர்த்துச் சொல்லியிருக்கிறான் என்பதைப் பிறகு தெரிந்துகொண்டேன்!

* * *

ஒரே கதையுடைய இரு படங்களிலும் ஒரே நபர் ஏக காலத்தில் நடிப்பதாக இருந்தால் படம் வெளி வந்ததும்

பட முதலாளிகள் விளம்பரம் செய்வது விநோதமா யிருக்குமல்லவா?

* * *

கூடிய சீக்கிரத்தில் இம்மாதிரி விளம்பரம் வரக்கூடும். அதாவது 'மேனு'செட்டியார் எடுக்கப்போகும் பவளக்கொடியிலும், பக்ஷிராஜா பிலிம்ஸார் எடுக்கப் போகும் பவளக்கொடியிலும் டி. ஆர். மஹாலிங்கமேதான் நடிக்கப் போகிறாராம். ஆனால் வெவ்வேறு வேஷத்திலாம்!

* * *

இனி அவர்களது விளம்பரம் பின்வருமாறு இருக்கும் என கற்பனை செய்து கொள்ளலாம். பக்ஷிராஜா பிலிம்ஸார்: "டி. ஆர். மஹாலிங்கம் கிருஷ்ணனாக நடிக்கும் **பவளக்கொடி**" என்று விளம்பரம் செய்யலாம். ஏ.வி.எம். ஸ்டுடியோக்காரரோ "டி. ஆர். மஹாலிங்கம் அர்ஜுனனாக நடிக்கும் **பவளக்கொடி**" என்று விளம்பரம் செய்யலாம்.

* * *


கைத்தறி ஜவுளிகள்

நீங்கள் விரும்பும்
உயர்ந்த ரக ஜவுளிகள்
யாவும் குறைந்த
விலையில் எம்மிடம்
கிடைக்கும்.

★

வாசுகி
வஸ்திராலயம்

22 மேல சித்திரை வீதி,
மதுரை.


சென்ற ஆண்டு வைகுண்ட ஏகாதசியன்று சென்னை வட்டாரங்களிலே மூன்று "மீரா"க்கள் நடு நிசியில் காட்சியளித்தார்கள். இவை ராஜசுந்தரிபாய் நடித்த **மீராபாய்**, (பழைய) வசுந்தரா தேவி நடித்த **பக்த மீரா**, எம். எஸ். சுப்புலக்ஷ்மி நடித்த **மீரா** ஆகியவைகளாகும். "எங்கள் கொட்டகையில் நடுநிசிக்காட்சி மீரா" என்று மையமாக மூன்று தியேட்டர்காரர்களும் விளம்பரம் செய்தார்கள்! பொதுஜன குழப்பத்திற்குக் குறைவேயில்லை.

இந்த வருஷ ஏகாதசியன்றுவது பி. எஸ். வி. ஐயர்திருப்தி அடைந்திருப்பார். அவரது ருக்மாங்கதன் சென்னைத் தியேட்டர் ஒன்றிலே நடு நிசிக் காட்சியாகக் காட்டப்பட்டதைத்தான் குறிப்பிடுகிறேன். ஏனென்றால் சென்ற ஆண்டு ஏகாதசிப்பலனை கூறும் ருக்மாங்கதனுக்கு ஏகாதசியன்று திரையில் தரிசனம் தரக்கூட முடியாமல் போய் விட்டதல்லவா? இப் படம் திரையிடப்பட்ட பாரகன் டாக்கீஸே இடிந்துபோய், மூடப்பட்டு விட்டது தான் நேயர்களுக்கு ஞாபகமிருக்குமே.

* * *

இவற்றை எல்லாம் வைத்துக்கொண்டு தான் பாவம் "பி. எஸ். வி. ஐயருக்கு அதிர்ஷ்டமில்லை" என்று சிலர் சொல்லுகிறார்கள் போலிருக்கிறது. ஆகவே ஒரு ஆங்கில சினிமாப் பத்திரிகையில் ராசிகளுக்கு அதிர்ஷ்டக் குறிப்புகளை எழுதியவரின் பெயர் "பி. எஸ். வி. ஐயர்" என்று போட்டிருந்ததைப் பார்த்ததும் நான் திகைத்துப்போனேன். தனக்கே ராசியும் அதிர்ஷ்டமும் இல்லாத ஒருவர் பிறருக்குபலன் எழுத வந்து விட்டால் யார்தான் ஆச்சரியப்பட மாட்டார்கள். ஆனால் அது மாதிரியெல்லாம் விசித்திரமொன்றும்நேர்ந்துவிடவில்லை! ராசி பலன்கள் எழுத ஆரம்பித்திருக்கும் பி. எஸ். வி.ஐயர் டைரக்டர் பி. எஸ். வி. ஐயரல்லவாம்.

# ஸினி புரொஜக்டர்கள்

## சகலவிதமான தேவைகளுக்கும் உகந்தவை

ரெடி ஸ்டாக்கி
னின்று கிடைக்கும்

**MICRON**



**FEDI V/R. 5**
**VICTORIA IV. B**
இவை தவிர

★

எங்களிடம்
**MICRON XI B**
**& XII**
புகழ்பெற்ற இத்தா
லிய புரொஜக்டர்-
கள் மலிவான விலை
யில் கிடைக்கும்



★

நேரடியான இறக்குமதியாளர் :

# தேவி பிலிம்ஸ் லிமிடெட்,

498, தங்கசாலைத் தெரு, மதருஸ்

ஹை & லோ இன்டென்ஸிடி ஆர்க் விளக்குகளுக்கு வேண்டிய
மார்கனைட்-இங்கிலீஷ் கார்பன்களும் நேரடியாக இறக்குமதி செய்கிறோம்.
நிரந்தரமான ஸினிமா தியேட்டர்களுக்கும் டூரிங் சினிமாக்களுக்கும்
மாதாந்திர ஒப்பந்தத்தின் பேரில் கிடைக்கும்.
சப் டிஸ்டிரிப்யூட்டர்கள் :

**M/s கன்னட கமர்ஷியல்**
**கார்ப்பொரேஷன் லிட்.,**
61, டாங்க் பண்ட் ரோடு,
ராமகிருஷ்ணபுரம், பெங்களூர் ஸிடி.

**M/s T.N.K. கோவிந்தராஜு**
**செட்டி, & கோ.,**
நெ. 26, நாலாவது மாடி,
முதல் அக்யாரிலாண்ட்,
பார்ஸி கல்லி, பம்பாய்.

**ஸ்ரீ K. V. கிருஷ்ணராஜ்**
மூங்கபாடி தெரு,
குகை, சேலம்.

●

**ஸ்ரீ அகஸ்தியா ஏஜன்ஸீஸ்**
56, லால்கான் தெரு,
சிதம்பரம்.

# பொதுஜனம் பேசுகிறார்

## * மத துவேஷம்

கிறிஸ்தவர், முகம்மதியர், பௌத்தர், சைனர் முதலியவர்களின் மத சம்பந்தமான கதைகளும், புராண இதிகாசங்களும், திரையிலோ அல்லது மேடையிலோ அதிகம் வருவதில்லை. அப்படியே தோன்றினாலும், அம்மத ரட்சகர்களின் சம்மதம் பெற்று, மூல நூல்களினின்று சிறிதும் பேதமற்ற முறையில் தோன்றுகின்றன.

ஆனால் மிகப் பழமையானதும், நம் மதிப்பிற்குரியதுமான ஹிந்து புராணங்களோ எவ்விதத் தடையுமின்றி வெளி வருவதுடன், முதலாளி, நடிகர்கள் இவர்களுடைய மனப் போக்கிற்கு ஏற்றவாறு மாறுபடவும் செய்கின்றன. இதர மதத்தினரின் ஆலயங்களை ஜோடனை செய்து காட்டுவதானால்கூட அம் மதப்பெரியோர்களின் சம்மதம் பெற வேண்டி யிருக்கிறது. ஆனல் நம் பட சிருஷ்டிகர்த்தாக்களோ ஹிந்துக் கோயில்களையும், ஹிந்துக் கடவுள்களையும் மனம்போனபடி யெல்லாம் தங்கள் படங்களில் காட்டி வருகின்றனர். இவர்கள் இழிவு படுத்தும் இச் செயலை ஹிந்து மதம் சகித்துச் சும்மா இருக்குமே யல்லாது, பிற மதங்களாயின் சட்ட உதவி பெற்று அவ்வகைப் படங்களை சுட்டெறித்து சாம்பலாக்கி விடும். இவ் வுண்மையை நம் (மேடை) திரை உலகத்தோர் நன்கு உணர்ந்து, நடப்பார்களாயின் நாட்டிற்கு நலம்.

—''கமாஸ்,''
கோலார் பொன் வயல்.

## ஸ்லேடு விளம்பரம்

நான் சமீபத்தில் ஒரு படத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன், இடை வேளையில் காட்டப்பட்ட விளம்பர ஸ்லேடுகளை (பொழுதுபோக்கிற்காக) எண்ணிக் கொண்டிருந்தேன். மொத்தம் 112 ஸ்லேடுகள் காண்பிக்கப்பட்டன! வாஸ்தவம் தான்; மிகைப் படுத்திச் சொல்ல வில்லை.

இவ் விதம் நூற்றுக் கணக்கில் ஸ்லேடுகளை காண்பிப்பதால் விளம்பரதாரர்களின் நோக்கமே கெட்டு விடுகிறது. நூற்றுக் கணக்கான விளம்பரங்களைப் பார்ப்பதனால் ஜனங்களுக்கு அவற்றில் ஒன்றைக் கூட சரியாக ஞாபகம் வைத்துக் கொள்ள முடிவதில்லை. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஸ்லேடுகளை காண்பித்தால் தான் பயனுள்ளதாக இருக்கும். ஜனங்களுக்கும் சலிப்பு ஏற்படாது.

தியேட்டர் முதலாளிகள். பணத்தைப் பெரிதாகக் கருதாமல், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு அதிகமான விளம்பரங்களை ஏற்றுக் கொள்ள மறுத்து விட வேண்டும். அல்லது தினத்திற்குக் கொஞ்சமாகக் காட்ட வேண்டும்.

—எம். என். வெங்கட்டராமன்,
மதுரை.

## அரட்டைக் கச்சேரி

நல்ல புதுப் படங்கள் வந்தால் அதை ஆவலுடன் பார்க்க உள்ளே செல்கிறோம். நிசப்தமாக இருக்கும். ஜனங்களில் சிலர் படம் ஆரம்பித்தவுடன் தம் வீட்டுக் கதைகளைப் பேச ஆரம்பிக்கிறார்கள். இவர்களெல்லாம், படம் பார்க்க வருகிறார்களா? அல்லது, வீடுகளைப் பற்றியும், நிலங்களைப் பற்றியும் அளக்க வருகிறார்களா? தெரியவில்லை. தாமும் படத்தைப் பார்க்காமல், மற்றவர்களையும் படம் பார்க்க விடாமல் செய்யும், இவர்கள் படம் பார்க்க வரவே கூடாது. அல்லது, இடை வேளை யொன்று இருக்கிறதே, அப்பொழுது அளக்கட்டும். சோடா, கலர் விற்கும் பையனின் அலறலுடன் படம் பார்க்கும் நாம், இவர்களுடைய பேச்சுக்களையும் சகித்துக் கொள்ள வேண்டுமா? படத்தைப் பற்றி ஆரம்பத்தி லிருந்தே விமர்சனத்தை ஆரம்பித்து விடுவார்கள் சிலர். படம் முடிந்து அவர்கள் விமர்சனத்தை அளக்கட்டுமே. இனி இந்த ''மனித மூட்டைப் பூச்சிகள்'' உபத்திரவம் செய்யாதுஎன்று நினைக்கிறேன்.

—வி. வீ. நாராயணன்,
காரைக்குடி.

## அட்டூழியம்!

புதுக் கோட்டை சமஸ்தானத்தில் பொன்னமராவதிக்குச் சமீபத்தில் "..............." ஓர் தியேட்டர் இருக்கிறது. இந்த தியேட்டரில் முன்பு ஸ்திரீகள் உட்காருவதற்கான இடத்தை மாடியில் ஏற்படுத்தியிருந்தார்கள். இப்பொழுது இந்த வகுப்பை ஆண்கள் உட்காரும் பெஞ்சுகளுக்குப் பின்புறம் அமைத்திருக்கிறார்கள், மேல் மாடியோ காலியாகவே யிருக்கிறது. ஆண்கள் பெண்கள் வகுப்புகளுக்கிடையே கம்பி போட்டு தடுத்திருக்கிறார்கள். சில மைனர்கள் பெண்கள் வகுப்புக்கு ஒட்டினாற் போல் இந்தக் கம்பி வேலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு செய்யும் அக்கிரமங்களை...... அப்பப்பா...........இங்கே எழுதுவது அசங்கியமாயிருக்கும். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் கௌரவமுள்ள ஆண்களோ, பெண்களோ இந்தத்தியேட்டரில் படம் பார்க்கச் செல்ல மாட்டார்கள்.

இத் தியேட்டரின் மேனேஜர் இது போன்ற அட்டூழியங்களைத் தடுக்க வேண்டும். பெண்களுக்கு முன்போலவே மாடியில் தனியாக இடம் அளிக்க வேண்டும்.

—வி. ஷண்முகம்,
தெக்கூர்

## பெண்களுக்குத் தனித் தியேட்டர்

சினிமாக் கொட்டகைகளில் பெண்களுக் கென்று தனி இடம் ஏற்படுத்துவது கூடாது, அவர்களுக்குத் தனித் தியேட்டர்களே ஏற்படுத்திவிட வேண்டும்.

சினிமாப் பார்க்க வரும் பெண்களிடம் சில காலிகள் எவ்வளவு கேவலமாக நடந்து கொள்ளுகிறார்கள் என்பது அநேகருக்குத் தெரிந்த விஷயமே. ஸ்திரீ வகுப்புகள் ஓரமாக உட்கார்ந்து கொண்டு இவர்கள் பேசும் ஆபாசங்களைக் காது கொண்டு கேட்க முடியாது.

தியேட்டரில் சொற்ப கலாட்டா ஏற்பட்டாலும் போதும். அதை மேற்படிக் காலிகள் பெரிதுபடுத்திப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். பெண்கள் வகுப்பிற்குச் சென்று அவர்களை மானபங்கப் படுத்தவும், நகைகளைக் களவாடவும் செய்கின்றனர்.

இதை யெல்லாம் கவனிக்கையில் பெண்களுக்கென தனியாக சினிமாக் கொட்டகைகள் ஏற்படுத்துவது நலமென்று தோன்றுகிறது.

—வி. ஏ. குப்புசாமி,
சிதம்பரம்

## ஏமாற்று வித்தை!

ஒவ்வொரு தியேட்டரிலும் ஒவ்வொரு வகுப்புக்கும் இவ்வளவு பேர்களைத்தான் அனுமதிக்க வேண்டுமென்று சர்க்கார் கட்டுப்பாடு ஏற்படுத்தியிருப்பது உண்மையே. ஆனால் இந்தக் கட்டுப்பாட்டின்படி பல தியேட்டர்தாரர்கள் நடப்பதுதான் இல்லை. சர்க்காரை ஏமாற்றுவதற்கு அவர்கள் என்னென்னவோ உபாயங்களைக் கையாள்கிறார்கள். ஐந்நூறு பேர்கள் உட்கார வேண்டிய இடத்தில் அவர்கள் 700-பேர்களை நுழைத்து விடுகின்றனர். ஜனங்களிடம் வசூலிக்கும் டிக்கெட்டுகளை கிழிக்காமல் மீண்டும் விற்பனைக்கு அனுப்பி விடுவதாகவும் தெரிகிறது. இடத்திற்கு அதிகமான ஆட்களை உள்ளே விடுவதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இதைத் தடுப்பதற்கு சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

—அஹ்மத்,
கோபி.

## பகல் கொள்ளை

எங்கள் ஊரில் உள்ள "...........சினிமா" வில் நடக்கும் அக்கிரமம் சொல்லத் தரமல்ல. பெஞ்சு வகுப்பிற்கும். அதற்கு மேல் வகுப்புகளுக்கும் டிக்கெட் கொடுக்கும் நபர்கள் துணிவாகப் பகல் கொள்ளை அடிக்கிறார்கள். நாம் அதிக டிக்கெட்டுகளை சேர்ந்தாற் போல் வாங்கினால் இவர்களுக்கு அதிக கொள்ளை. 10 டிக்கெட்டிற்குப் பணத்தை நீட்டினால் எட்டு டிக்கெட்டுகளைத்தான் கொடுப்பார்கள். பின்னால் உள்ளவர்கள் தள்ளுகிறார்களே என்று கையில் டிக்கெட்டை வைத்து முடிய வண்ணம் வெளியே வந்து பார்க்கும் போதுதான் இவர்களது மோசம்வெளி

---

*பரிசு பெற்ற கடிதம்

எழுதியவர்:

டி. ஆர். ஆர். ஸ்வாமி,
97, யூரேஷ்யன் பிளாக்,
மாரிக்குப்பம்,
கோலார் தங்க வயல்.

---

யாகும். டிக்கெட் அறைக்குள் சென்று விசாரித்தாலோ "பத்து டிக்கெட்டுகள் தான் கொடுத்தேன்" என்று ஒரேயடியாய் சாதித்து விடுவார்கள். பாக்கி சில்லரை கொடுக்கும் விஷயத்திலும் இதே போலத்தான் ஏமாற்றுகிறார்கள். இதை தியேட்டர் நிர்வாகிகள் கவனிக்க வேண்டும்.

—ஆர். டி. என்,
மஞ்சக்குப்பம்.

## பார்ப்பது கெடுதலா?

சென்ற அக்டோபர் "குண்டூசி"யில் தஞ்சை சகோதரி எழுதியபடி, "பெண்கள் சினிமா பார்க்கக் கூடாது. பெண்களை சினிமா பார்க்க அனுமதிக்கக் கூடாது" என்று எழுதியதை நான் முழுதும் ஆட்சேபிக்கிறேன்.

ஆபாசப் படங்கள் கற்புக்கரசிகளை என்ன செய்து விட முடியும்? உறுதி மனப்பான்மை கொண்ட பெண்கள் இத்தகைய ஆபாசப் படங்களினால் கெட்டு விடமாட்டார்கள் என்பது என் அபிப்பிராயம். குழந்தைகள் விஷயம் அவர்களின் மனப்பான்மையைப் பொருத்தும், பெற்றோர்களைப் பொருத்து மிருக்கின்றது.

எல்லா விஷயத்திற்கும், கலை வளர்ச்சிக்கும் சினிமா ஓர் சிறந்த சாதனம். இதைப் பலரும் பார்க்க வேண்டும். ஆணும் பெண்ணும் சம உரிமை கொண்டு, எதையும் ரசிக்க வேண்டும். தீமையைத் தள்ளி நன்மையைக் கொள்ள வேண்டும். மனிதருக்கு கெட்டதை சீக்கிரத்தில் கிரகிக்கும் தன்மையை இயற்கை அளித்திருக்கின்றது. இது உண்மை. ஆனால், மனோதிடத்தின் முன் எதுவும் எதையும் செய்வதற்கில்லை.

—ஏ. எஸ். ராஜமாணிக்கம்,
சிங்கப்பூர்.

## கிராமியப் படங்கள்

உலகெங்கும் மறுமலர்ச்சி மிளிர்கிறது. அதனுடைய வாசனை நம் தென்னாட்டு படங்களில் கொஞ்ச காலமாக வீச ஆரம்பித்திருக்கிறது. அதன் விளைவாகவே தற்பொழுது சமூகப் படங்கள் சண்டமாருத வேகத்தில் வெளிவருகின்றன.

"புராணப் படங்கள் பூண்டோடு அழியட்டும்; சமூகப் படங்கள் தான் எங்களுக்குத் தேவை" என்று ஒரு சாரர் கூறுகின்றனர். மற்றும் சில ரஸிகர்கள் "சரித்திரப் படங்களையே எடுங்கள்" என்கிறார்கள். ஆனால் ஒரு சிலராவது—எனக்குத் தெரிந்த வரையில்—"கிராம வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட கிராமியப் படங்களை தயாரியுங்கள்" என்று கூறுவதாகத் தெரியவில்லை. பெரும்பாலான ஹிந்திப் படங்கள் கிராமியக் கதைகளைக் கொண்டவைகளாகவே இருக்கின்றன. அவைகள் வெற்றி அடையவில்லையா? "கிராம வாழ்க்கையிலேயே வாழ்க்கையின் உன்னத லக்ஷியங்கள் பொதிந்து கிடக்கின்றன" என்று அறிஞர்கள் அபிப்ராயப்படுகின்றனர் ஆகையால் இனி மேலாவது தென்னாட்டு பட உற்பத்தியாளர்கள் இம் முயற்சியில் ஈடு படுவார்களாக!

—சா. வை. நாதன்,
கும்பகோணம்.

## ஈயடிச்சான் காப்பி

சினிமாக் கலையில் தற்போது, தென்னாட்டின் படக்கலை மிகவும் மோசமாக இருந்து வரக் காரணம், படமுதலாளிகளுக்கு கலையின் முன்னேற்றத்தைப் பற்றிய அசிரத்தைதான். சினிமா என்றால் பட முதலாளிகளுக்கு 'பணம்' தான் முதலில் கண்களுக்குப் புலப்படுகிறது. இதனால், அவர்கள் மக்கள் எந்த விதத்தில் உற்சாகத்தைக் காண்பிக்கின்றார்களோ, அந்தந்த விஷயங்களை முதலாகக் கொண்டு, அவர்களுக்குப் பிடித்தமான அம்சங்களை (தேசியத் தலைவர்களின் படங்களையோ, ஆபாச நடனங்களையோ) தாங்கள் எடுக்கும் படங்களில் காரணமில்லாமல், பொருத்தமில்லாத இடங்களில் புகுத்தி, ஏமாற்றி வருகிறார்கள்.

ஒரு கம்பெனி, ஏதோ ஒரு படத்தை புது மாதிரியில் எடுத்து, அதற்கு ரஸிகர்களின் ஆதரவு கிடைத்து விட்டால் போதும், உடனே, பல கம்பெனிகள் அதையே "ஈயடிச்சான் காப்பி" செய்கின்றன. இதனால் படமெடுப்பதின் நோக்கம் பணம்தான் என்று அவர்களே நமக்கு நன்றாக விளங்க வைக்கிறார்கள். இப்படி அனாவசியமாக, தேசியத் தலைவர்களின் படங்களைத் தம் ஆபாசமான படங்களில் காட்டுவதால், படத்தின் கெட்ட பெயர் தேசியத் தலைவர்களையும் ஒரு விதத்தில் பாதிக்கும். ஆதலால் ஈயடிச்சான் காப்பி வழக்கத்தை நம் படமுதலாளிகள் உடனே நிறுத்துவார்களா?

—த. சந்திரசேகரன்,
சேத்துப்பட்டு.

இன்பி Jan 1958

# ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி

— படக் கதை —

கற்றறிந்தவன்! கலை ஞானமுள்ளவன்! சந்நியாசி! ஆனல், அவன் காமப் பித்தன்- அஷ்டமாசித்தி அடைந்தால் தன் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் பூதத்தை யோசனை கேட்கிருன். ஆயிரந் தலைகளைக் கொண்டு யாகம் செய்தால் அஷ்டமாசித்தி கிடைக்கும் என்றும், அதற்கு ஆதித்த புரி மன்னன் மகள் அபூர்வ சிந்தாமணியின் அழகைப் பயன்படுத்திக் கொள் என்றும் பூதம் கூறுகிறது.

அபூர்வ சிந்தாமணி கல்வியில் தேர்ந்த ஆணவக்காரி! தக்க அசானிடத்தில் மேலும் பாண்டித்யம் அடைய விரும்பினள். அந்த சமயத்தில் கபட சந்நியாசி வந்து ஆசானக அமருகிருன். அவந்தி நாட்டு மன்னனின் மகள் செங்கமலம் தன் பெற்றோரை இழந்து, சிந்தாமணியோடு சகோதரி போல் வளர்ந்து வருகிருள். சந்நியாசியிடம் சிந்தாமணி மிகுந்த குரு பக்தியுடன் இருந்து வரும்போது, சிந்தாமணியின் அம்மான் புரந்தரன் அவளை மணக்க விரும்புகிருன். வந்த காரியத்தை முடிக்கச் சமயத்தை எதிர்பார்த்திருந்த கபட சந்நியாசி, சிந்தாமணி கல்வியில் தேர்ந்த கணவனையே பெறவேண்டும் என்றும், தான் சொல்லுகிறபடி அவள் நடந்து சிறந்த கணவனையும், பெரும் புகழையும் பெறவேண்டும் என்றும் கூறுகிருன். சந்நியாசியின் திட்டப்படி சிந்தாமணியை மணக்க வருபவரை மூன்று கேள்விகள் கேட்பதென்றும் சரியானவிடை அளிப்பவரை மணந்து கொள்வது; இல்லாவிடில் அவரது தலையை வாங்கி விடுவதென்றும் விளம்பரப் படுத்தப்படுகிறது. இதை அறிந்த புரந்தரன் வந்து, கேள்விக்கு விடை யளிக்க முடியாமல் முதல் பலியாகிருன். இம்மாதிரி சிந்தாமணியை மணக்க வந்தவர்களின் எண்ணிக்கை 999 ஆகிறது.

கைவல்யபுரத்து அரச குமாரன் மெய்யழகன் தன் ஆறு சகோதரர்களும் சிந்தாமணியால் மடிந்ததை அறிந்து, கேள்விக்கு விடை அளித்து பழி தீர்க்கச் சபதம் செய்து கொண்டு, தோழன் காளியுடன் ஆதித்தபுரிக்கு வந்து கேள்விகளைத் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் சிந்தாமணியின் தோட்டத்தில் வேலைக்கமர்கிருன். செங்கமலம் மெய்யழகன் மீது காதல் கொள்கிருள். சிந்தாமணியின் கேள்விகளும் விடைகளும் தெரிந்த பின்பு அவனை மணந்து கொள்வதாகச் சொல்கிருன். செங்கமலம் கேள்விகளைச் சொல்லி, விடைகள் மதிவதன புரத்திலும், சம்பங்கி புரத்திலும், நதிசில புரத்திலும் இருப்பதாகச் சொல்கிருள். மெய்யழகன் விடை அறிவதற்காகப் புறப்படுகிருன். தோட்டக்காரன் மகள் தங்கம் தான் வைக்கும் புள்ளிக்குக் கோலம் போட்டு முடிக்கிறவனை மணந்து கொள்வதாக விரதம் பூண்டிருக்க, காளி அவளை மயக்கி விடுகிருன். காளியும் மெய்யழகனும் சந்நியாசி வேஷத்தில் கப்பலில் போகும்போது கப்பல் உடைந்து

உயிர் தப்பி, வன காளியைப் பூசித்து, காரியம் வெற்றியடையவும், இறந்தவர் பிழைக்கவும் வரம் பெற்று, மதிவதனபுரத்தை அடைகிறார்கள். அங்குள்ள தோட்டக்காரன் வீட்டில் இரவைக் கழிக்கிறார்கள்.

அவ்வூர் அரசன் சத்தியசீலன், சந்நியாசிகளை வெறுப்பதற்குக் காரணம் என்னவென்று தோட்டக்காரனின் மனைவி அவனிடம் கேட்கிறாள். அதற்குத் தோட்டக்காரன் கதை சொல்லுகிறான்: "மதிவதனபுரத்தை ஆண்ட உத்தம கேதுவுக்கு 101 மனைவிகள்; 101 குமாரர்கள். நீக்கப்பட்டு வேறு தேசத்தில் இருந்த மூத்த மனைவியின் குமாரன் சத்தியசீலன், வயது வந்ததும், தந்தை தங்களை நீக்கி வைத்ததை அறிந்து வருந்துகிறான். பிறகு, அவர் போரில் தோல்வியடைய விருந்த சமயம் சத்தியசீலன் மாறு வேஷத்தில் சென்று பகைவனை விரட்டுகிறான். மன்னன் சத்தியசீலனை மெச்சி அவனை பிரதானியாக அமர்த்திக் கொண்டு, மற்ற 100-மைந்தர்களுக்கும் ஆசிரியனாக நியமிக்கிறான். பொறாமை கொண்ட நூற்றுவரும் சூழ்ச்சி செய்து காட்டிற்குப் போகிறார்கள். அரசன் சத்தியசீலனைச் சந்தேகித்து, தன் புத்திரர்களைக் கொண்டு வந்து சேர்க்காவிடில் தலை போகும் என்று சொல்லவே, சகோதரரைத் தேடி அலைகிறான்.

கஞ்சனபுரத்து அரசனின் மகள் மஞ்சளழகி, பட்டத்துக்கு வந்த செம்படவ இளைஞனுக்கு இணங்காமல் தப்பி செம்படவர்களால் ஆதரிக்கப்பட்டு வருகிறாள். ஒரு கபட சந்நியாசி மஞ்சளழகியைக் கண்டு மோகித்து, மந்திரக்

கோலால் மயக்கி, தூக்கிச் சென்று விடுகிறான். சத்தியசீலன் இந்தக் காட்டின் வழியாக வரும்போது, சந்நியாசியைக் கண்டு அவனைப் பின் தொடர்ந்து தன் சகோதரர்கள் மயங்கிக் கிடப்பதைக் காண்கிறான். சந்நியாசி தன் மந்திரக் கோலின் மாயத்தால் அவர்களுக்கு உணவளித்து, பின் மீண்டும் மூர்ச்சையாக்கிவிட்டுப் போவதை சத்தியசீலன் கண்டு அவனை மேலும் பின் தொடருகிறான். மஞ்சளழகியை சந்நியாசி கற்பழிக்கப் போகும் சமயம், சத்தியசீலன் மந்திரக் கோலைப் பிடுங்கிக் கொண்டு சந்நியாசியை விரட்டி, மஞ்சளழகியையும் அழைத்துக் கொண்டு சகோதரர்களையும் எழுப்பிக் கொண்டு வருகிறான். அரசன் விவரம் அறிந்து மஞ்சளழகியை சத்தியசீலனுக்கு மணம் முடித்துப் பட்டமும் கட்டி வைக்கிறான்" என்று தோட்டக்காரன் கதையை முடிக்கிறான். இக்கதையை கேட்டுக் கொண்டிருந்த மெய்யழகன் சிந்தாமணியின் முதல் கேள்விக்கு விடை இதுதான் என்று தெரிந்து கொள்ளுகிறான். பிறகு, சத்தியசீலனிடம் இக் கேள்வியைச் சொல்லவே சத்தியசீலன் தானே நேரில் விடையளிப்பதாகச் சொல்கிறான். பின்னர் மெய்யழகனும் காளியும் சம்பங்கிபுரத்துக்குச் செல்கின்றனர். எல்லைப்புறக் காவல்காரனைச் சந்தித்தபோது அவன் அவ்வூர் ராணி தம்பதியின் வீரச் செயல்களைச் சொல்கிறான்:—

"சம்பங்கி புரத்தை ஆண்ட அம்பரகேதுவுக்கு அம்பிகா நிதி ஏக புத்திரன். பிரதானியின் மகளான தம்பதியை அம்பிகாநிதி மணந்து கொள்ள விரும்புகிறான். இதற்கு மன்னன் சம்மதியாததால் அம்பிகாநிதி தன் முதல் மனைவி இளவேணியுட

னும் தம்பதியுடனும் புறப்பட்டு வேறு தேசத்திற்குப்போகிறான். வழியில் ஒரு புலியைத் துரத்திக் கொண்டு போன அவன் வழி தவறிப் போய்விடுகிறான். காணமற் போன கணவனைக் கண்டு பிடிப்பதற்காக தம்பதி ஆண் உடையணிந்து இளவேனியுடன் மணிபுரிக்கு வருகிறாள். குணபதியரசன் தம்பதியை பிரதானி வேலைக்கு அமர்த்திக் கொள்கிறான். ஒரு நாள் இரவு கேட்ட பெருங் கூச்சலை அடக்க சுடுகாட்டிற்குப் போகிறாள். தம்பதி அங்கு அழுது கொண்டிருந்த ஒரு கிழவி ராக்ஷஸியாக மாறி தம்பதியை விழுங்க வந்த சமயம், பெண் வாடை கண்டு, தம்பதியின் தைரியத்துக்கு மெச்சி, பளபளப்பான ஒரு சேலையையும் மோதிரத்தையும் கொடுத்து மறைகிறாள்.

அரசன் இந்த கண்டபேரண்ட ராக்ஷஸி ஒழிந்ததற்காகக் கொண்டாடிய விழாவிற்கு அந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு இளவேணி வருகிறாள். இதைப் பார்த்த அரசகுமாரிகளான பாரதி விவேகவதி இருவரும் தங்களுக்கும் இதுபோன்ற சேலை வேண்டும் என்று கேட்கின்றனர். தம்பதி 6-மாசம் தவணை பெற்று ராக்ஷஸியின் மகன் பாம்பரக்கன் வசிக்கும் புட்கரபுரிக்கு வருகிறாள். அவனைக் கொன்று அவன் மகள் ரத்னவல்லியைச் சந்திக்கவும் அவள் தம்பதிமீது காதல் கொண்டு, தன்னையும் மக

மேரு மலையிலிருக்கும் தன் தங்கை மாணிக்கவல்லியையும் மணந்து கொள்ளும்படி வேண்டுகிறாள். அதற்கிணங்கி தம்பதி மகமேரு மலைக்குச் சென்று, அரக்கரைக் கொன்று, சேலையுடனும் மாணிக்கவல்லியுடனும் புட்கரபுரிக்கு வருகிறாள். அவ்வூர் அரசனின் மகள் சக்கரவேணியுடனும், அங்கு அகப்பட்ட கணவன் அம்பிகாநிதியுடனும் மணிபுரிக்கு வருகிறாள்.

"சேலை கொண்டுவரும் வீரனைத்தான் மணப்போம்" என்று சொன்ன பாரதி விவேகவதி இருவரையும் அழைத்துக் கொண்டு தம்பதி தன் நாடு திரும்புகிறாள். வழியில், பஞ்சவஞ்சியரையும் ஒரு கபட சந்நியாசி கவர்ந்து சென்று குகையில் பலாத்காரம் செய்கிறான். தேடிச் சென்ற தம்பதி, சந்நியாசியை அடித்துத் துரத்தி பஞ்சவஞ்சியரையும் மீட்டு, சம்பங்கிபுரம் வந்து சேருகிறாள். அம்பிகாநிதி தனக்குக் கிடைத்த ராஜ்யத்தை தம்பதிக்கு முடிசூட்டி வைக்கிறான்" என்று கதையை முடிக்கிறான் காவற்காரன்.

இரண்டாவது கேள்விக்கு விடை இந்தக் கதைதான் என்றறிந்து மெய்யழகனும் காளியும் தம்பதியைச் சந்தித்து விபரம் கேட்கிறார்கள். தம்பதி கபட சந்நியாசியை ஒழிப்பதற்குத் தானே நேரில் வந்து விடையளிப்பதாகச் சொல்லுகிறாள்.

பிறகு மெய்யழகன் மூன்றாவது கேள்விக்கு விடை அறிவதற்காக நதிசீலபுரத்தை அடைகிறான். போகும் வழியில் மூன்று ராஜகுமாரிகளைச் சந்திக்கவும், அவர்களால் எதிர்பாராத வகையில் சிறையிடப்பட்டு பிறகு தந்திரமாய்த் தப்பி வெளியேறுகிறான்.

அதன் பிறகு பல கஷ்டங்களுக்குள்ளாகி, நதிசீலபுரத்தை அடைந்து மன்னனைப் பார்க்கச் செல்கிறான். அங்கு மன்னன் மதிவதனன் ஒரு ஸ்திரிக்கும், இரண்டு நாய்களுக்கும் அன்னமிடச் செய்து விட்டு, அந்த ஸ்திரியையும், நாய்களையும் மூர்ச்சை அடையும் வரையில் அடிப்பதைப் பார்க்கிறான். மன்னனிடம் இதன் காரணம் கேட்கவே மன்னன் முதலில் கோபிக்கிறான். பிறகு அந்த

ஸ்திரீ (தன் மனைவி) எவ்விதம் ஒரு சந்நியாசியிடம் தன் கற்பைப் பறி கொடுத்தாளென் பதையும் கூறி, அதற்குத் தண்டனையாகவே தான் இப்படிச் செய்து வருவதாகச் சொல்கிறான்.

மெய்யழகன் மன்னனிடம் மூன்றாவது கேள்வியைக் கேட்கிறான். மன்னன் அக் கேள்விக்குத் தானே நேரில் பதில் சொல்லுவதாகப் புறப்படுகிறான். மன்னனை அழைத்துக் கொண்டு, வழியில் தம்பதி, சத்தியசீலனையும் கூட்டிக் கொண்டு மெய்யழகன் ஆதித்தபுரியை அடைகிறான்.

பிறகு மெய்யழகன் சிந்தாமணியிடம் சென்று அவளுடைய மூன்று கேள்விகளுக்கும் தகுந்தவாறு பதில் அளிக்கிறான். தம்பதி சத்தியசீலன் ஆகியோரால் சிந்தாமணியின் குருவான சந்நியாசியின் கபட நாடகம் வெளியாக்கப் படுகிறது. தன் மனைவியின் கற்பைக் குலைத்ததற்காக மதிவதனன் அந்த சந்நியாசியின் தலையை ஒரேயடியில் சீவி பழி தீர்த்துக் கொள்ளுகிறான்.

காளி தேவியின் அருள் பெற்றிருந்த மெய்யழகன் சிந்தாமணியிடம் தலைகளைப் பறிகொடுத்த 999 பேர்களையும் உயிர்ப்பிக்கிறான். பிறகு கேள்விகளுக்குப் பதிலறிய உதவிய செங்கமலத்தை மெய்யழகனும், முதன் முதலாக தன் தலையை தியாகம் செய்த புரந்தரன் சிந்தாமணியையும், கோலத்தழகி தங்கத்தை (மெய்யழகனின் தோழன்) காளியும் மணந்து கொள்ளுகின்றனர்.


## எங்கள் வியாபார ஸ்தலங்கள்

பெங்களூர், பனாரீஸ், காஞ்சிவரம், பெங்கால் பட்டுப்புடவைகளுக்கும் இன்னும் எல்லாவித ஜவுளி தினுசுகளுக்கும் பெயர் போனவை

கால நிலையை அனுசரித்தே விலை

# P.R. நாராயணசாமி அய்யர்

Branch:

**Fancy Hall,** சைனாபஜார், திருச்சினாப்பள்ளி

பட்டு, நூல் ஜவுளி வியாபாரம்

பெரியகடை வீதி, திருச்சினாப்பள்ளி

SL NWm, N47 N48, 1.2

**லண்டனில் ராம்கோபால்**

பிரபல நாட்டியக்காரரான ஸ்ரீ. ராம்கோபால், லண்டனிலுள்ள பிரின்ஸிபல் தியேட்டரில் ஷேவந்தியுடன் நடனமாடி வருகிறார். "டெய்லி ஹெரால்ட்", "நியூஸ் கிரானிக்கிள்", "டைம்ஸ்" போன்ற பத்திரிகைகளெல்லாம் ராம்கோபாலின் நாட்டியத்தைப் புகழ்ந்து எழுதியிருக்கின்றனவாம்.

**திருஷ்டி போதனுமுறை**

"இந்திய சர்க்காருடைய எண்ணங்களையும், நடவடிக்கைகளையும் எளிதில் சாதாரண மனிதனும் புரிந்து கொள்ளக்கூடிய வாறு செய்வதே இந்திய சர்க்கார் ஏற்படுத்தும் திருஷ்டி போதனு முறையின் நோக்கம்" என்று இந்திய சர்க்காரின் செய்தி-விளம்பர இலாகா காரியதரிசி ஸ்ரீ. பால்ஜா படத் தொழில் சம்பந்தமாக வந்த தூது கோஷ்டியினரிடம் கூறினாராம். மேலும் அவர், "முன்பு இருந்த செய்திப்பட ஸ்தாபனத்தை சந்தேகக் கண்கொண்டே மக்கள் நோக்கி வந்தனர். இப்பொழுதோ நிலைமை மாறிவிட்டது. சர்க்கார் செய்யும் ஒவ்வொரு காரியங்களையும் எளிதில் சாதாரண மனிதன்கூடப் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் படங்களாகப் பிடிக்க வேண்டும், தனிப்பட்ட பட முதலாளிகளும் இந்த வேலையில் சர்க்காருக்கு உதவி புரியலாம். அவர்களும் இம் மாதிரி படம் பிடிக்க ஒரு சந்தர்ப்பத்தைப் பெறுவார்கள்" என்று கூறினர். படத் தொழில் சம்பந்தப் பட்ட பிரதிநிதிகள் அவரைச் சந்தித்தனர். இவர்களுடைய விஷயங்களை சர்தார் வல்லபாய் படேலிடம் தெரிவிப்பதாகவும் அவர் கூறினாராம்.

பம்பாயிலுள்ள பல ஸ்டுடியோக்களை ஸ்ரீ. பால்ஜா பிறகு பார்வையிட்டாராம்.

**மேலும் ஆங்கிலப் படங்கள்**

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள சினிமா ரஸிகர்களுக்கு காண்பிக்கப் படுவதற்காக மேனுட்டினர் நிறைய ஆங்கிலப் படங்களை உற்பத்தி செய்யப் போகிறார்களாம். லண்டனிலே நடைபெற்ற படத்தொழில் சம்பந்தப்பட்ட மகாநாட்டிலே ஆலோசிக்கப்பட்ட முக்கியமான விஷயம் இது. இதற்காக பிரிட்டிஷ் பில்ம் இன்ஸ்டிடியூட்டும், சென்ட்ரல் பில்ம் லைப்ரெரியும் சர்வ தேச ஜாபிதா ஒன்றை தயார் செய்கிறதாம். தேசத்திலுள்ள பிரதிநிதிகளுக்கு இந்த ஜாபிதா சமர்ப்பிக்கப்படுமாம். இதிலே படங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கி யிருக்குமாம். நான்கு பிரிவுகளைக் கொண்டதாக இருக்குமாம் இந்த விஷய ஜாபிதா. அரசியல், பொருளாதாரம், சமூகம், இதர பல நாட்டினரின் வாழ்க்கை சம்பந்தமான குறிப்புகள் முதலியவை முதல் பிரிவில் அடங்கி யிருக்கிறதாம். சுகாதாரம், குழந்தை பராமரிப்பு விபாதினை தடுத்தல், முதல் சிகித்சை, முதலியவைகள் இரண்டாம் பிரிவிலும், பண்ணை வைத்தல், நிலத்தை பண்படுத்தல், காட்டிலாகா, மீன் பிடித்தல், பிராணிகள் பண்ணை, கட்டிடம் கட்டுதல், முதலியவைகள் மூன்றும் பிரிவிலும், விவசாயம், உணவு தயாரிப்பு, அதைப் பாது காத்தல் முதலியவைகள் நான்காம் பிரிவிலும் இருக்கின்றனவாம்.

**எம். எஸ். எஸ். உதவினுர்**

தென்னிந்திய கல்விக் கழகத்தின் பள்ளிக்கூட கட்டிட உதவிக்காக பம்

134242

டைரெக்டர் :—நீங்கள் இதற்கு முன் ஏதேனும் படத்தில் நடித்திருக்கிறீர்களா?

நடிகை :—"பேயும் பெண்மணியும்" என்ற படத்தில் நடித்திருக்கிறேன்.

டைரெக்டர் :—சரிதான், அந்தப் படத்தில் பெண்மணியாக நடித்திருப்பவர் யார்?

—எஸ். வெங்கடசுப்பன், சேலம்.

பாயில் நடை பெற்ற ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரிக்கு சுமார் ஒரு லக்ஷ ரூபாய் வசூலாயிற்றும். தலைமை வகித்த பம்பாய் மாகாண மந்திரி. ஸ்ரீ. மொரார்ஜி தேசாய் பாடகியை அவரது சங்கீத மேன்மைக்காகப் பாராட்டினாராம். பரோடா மஹாராஜாவும் மஹாராணி சீதா தேவியும் கச்சேரிக்கு விஜயம் செய்திருந்தனராம்.

## லைசென்ஸ் ரத்து

கள்ளிக் கோட்டையிலிருக்கும் ராதா சினிமாவின் லைஸென்ஸை மலபார் ஜில்லா மாஜிஸ்டிரேட் நவம்பர் 29-ந் தேதியிலிருந்து ரத்து செய்து விட்டார். மேற்படி சினிமாத்தியேட்டர் சட்டத்தின்படி நடைபெறக் கூடியவாறு சரியாக அமைக்கப்படவில்லை என்பதே இதற்குக் காரணமாகும்.

## அமுலுக்கு வந்தது

1948-ம் வருஷம் ஜனவரி முதல் தேதி முதல் திருத்தப்பட்ட புதிய தமாஷா வரி விகிதம் அமுலுக்கு வந்திருக்கிறது. புதிய விகிதப்படி தியேட்டர்களில் டிக்கெட்டுகள் விற்கப்படுகின்றன.

## ராமராஜ்யம்

ஏவி.எம். ஸ்டுடியோவால் தயாரிக்கப்பட்ட தமிழ் ராமராஜ்யம் சென்னையில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வசனங்கள் ஒட்டப்பட்ட திறமையை யாவரும் புகழ்கிறார்கள். குரல் கொடுத்தவர்களின் சிறப்புகளையும் கூறுகிறார்கள். டி. கே. பட்டம்மாள், பகவதி, பி. ஜீ. வெங்கடேசன் இவர்களின் பின்னணிப் பாடல்கள் வெகு பொருத்தமாக அமைந்திருக்கிறதைப் புகழாதவர்களே கிடையாது.

## தேவதாஸி

சுகுமார் பிக்சர்ஸின் தயாரிப்பான "தேவ தாஸி" பொங்கலன்று வெளியூர்களில் திரையிடப் படுமாம். கண்ணன், லீலா, மணி, ஆர். சுப்ரமண்யம், டி. எஸ், துரைராஜ், என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் முதலியவர்கள் இதில்நடிக்கிறார்கள். எம். எல். டாண்டன் டைரெக்ட் செய்த படமிது.

## ஆண்டு பூர்த்தி விழா

தற்போது மதுரையில் நாடகங்களை நடத்தி வரும் ஸ்ரீ. நவாப் ராஜமாணிக்கம் தம் மதுரை தேவி பால விநோத சங்கீத சபாவின் பதினைந்தாம் ஆண்டு பூர்த்தி விழாவை சென்ற மாஸம் 24ந் தேதியன்று அதி விமரிசையாய் கொண்டாடினார். வழக்கம் போலவே ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப் பட்டது.

## சென்னையில் ஜலந்தர்

சென்னை கெபிட்டியிலே பொங்கல் முதல் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின்

"துளசி ஜலந்தர்" வெளியாகிறது. கற்பின் மகிமையை உணர்த்தும் இக் கதை பெண் மக்களுக்குப் பிடித்த மானவகையில் அமைந்திருக்கிறதாம். துரைராஜ் கோஷ்டியின் ஹாஸ்யம் நன்ருக இருக்கிறதாம், கண்ணம்பா பிருந்தையாகவும், சின்னப்பா ஜலந்தரனுகவும், கொத்தமங்கலம் சீனு நாரதராகவும், ஆர். பாலசுப்ரமண்யம் பாதாள கேதுவாகவும், மற்றும் டி. எஸ். துரைராஜ் சிங்கனுகவும், ஜயா வெங்கியாகவும் நடிக்கும் இப் படத்தை கே. நாகபூஷணம் டைரெக்ட் செய்திருக்கிருர்.

**கங்கணம்**

கே. ஆர். ராமசாமி, மேனகா, பசுபு லேடி லீலா, பி. ஜி. வெங்கடேசன், நரேந்திர நாத், காமெடியன் ஸ்ரீனிவாஸ், கல்யாணம், வி. செல்லம் ஆகியவர்கள் நடித்த, ஜி. பி, நாரயாணன் கம்பெனியாரின் **கங்கணம்** திருவண்ணமலே முதலிய இடங்களில் வெளியாகி யிருக்கிறதாம். வரலக்ஷ்மி விரதத்தை உணர்த்தும் இப் படம் நன்ருக இருக்கிறதாம். எஸ். கே. வாசகம் இதை டைரெக்ட் செய்திருக்கிருர்.

**கன்னிகா**

பக்ஷிராஜா பில்ம்ஸின் **கன்னிகா** திரையிடப்பட்ட இடங்களிலெல்லாம், அதாவது சுமார் இருபத்தி நாலு ஊர்களில் ஏக காலத்தில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடுவின் புகழ் இன்னும் மேலோங்கி வருகிறது. பொதுஜன மனப் பான்மையை அறிந்த டைரெக்டர்களில் இவரும் ஒருவர். அடுத்த படத்தின் வெற்றிக்குக் கேட்க வேண்டுமா?

**மதனமாலா**

ஸ்ரீராம், எம். வி. மணி இவர்களின் நடிப்பும், டி. ஆர். ரஜனியின் நாட்டியமும், பாட்டும் சிறப்பாக அமைந்த ஸ்ரீராமானந்தா பிக்சர்ஸின் **மதனமாலா** சுமார் ஒரு டஜன் ஊர்களில் மக்களே வசீகரித்து வருகிறதாம். தமிழ் நாடு டாக்கீஸ் வினியோகத்தை ஏற்றுள்ளனர்.

**"மீரா" உதவினுள்**

ஸ்ரீ கபாலீஸ்வரர் மஹா கும்பாபிஷேக நிதிக்காக சென்ற வைகுண்ட ஏகாதசி யன்று மிட்லண்ட் தியேட்டரில் நடை பெற்ற எம். எஸ். நடித்த **மீராவிற்கு** வசூலான தொகையை ஷை நிதிக்குக் கொடுத்தார்களாம். முன்பு ஸ்ரீரங்கேத்தாரணத்திற்கு எம். எஸ். உதவினுர். இப்பொழுதோ கும்பாபிஷேகத்திற்கோ "மீரா" உதவினுள்.

**மகாத்மா காந்தி**

முன்பே **மகாத்மா காந்தி** டாகுமெண்டரி படம் வெளி வந்ததல்லவா? இப்பொழுது பம்பாயில் ஸ்டிராண்ட் சினிமாவில் ஹிந்தி விளக்க உரையுடன் கூடிய, பத்து ரீல்கள் கொண்ட இப் படம் பிரத்தியேகமாகத் திரையிடப் பட்டதாம். பி. வி. பதி மிகவும்

"மஹாபலி" தமிழ்ப் படத்தில் மஹாபலியாக நடிக்கும் ஜி. ஆர். வரதாச்சாரி

சிரமப் பட்டுத் தயாரித்திருக்கும் இப் படத்தில் காந்திஜீயின் ஆரம்ப வாழ்க்கை, மற்றும் இந்தியாவில் நடந்த அரசியல் நிகழ்ச்சிகளுடன், சமீபத்தில் நடந்த சுதந்திரதின விழாக் காட்சிகள், இவை தொகுக்கப் பட்டிருக்கிறதாம். ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் பாடியுள்ள "ஆடு ராட்டே" என்ற பாட்டு வெகு நன்ருக இருக்கிறதாம்.

### விந்தியா ராணி

வைஜயந்தி பிலிம்ஸார் தயாரித்த "விந்தியாராணி" தெலுங்குப்படத்தின் பத்திரிகைக் காட்சி இம் மாஸம் 12-ந் தேதி கேஸினேவில் நடைபெற்றது. டி. வி, சுப்பராவ், ரமணராவ், புஷ்பவல்லி, வாலக்ஷ்மி முதலியோர் நடித்த இப் படம் பொங்கல் தினம் முதல் சென்னை ஸ்டார் டாக்கிஸில் காட்டப்பட்டு வருகிறது. இனிய சங்கீதமும், நல்ல காட்சியமைப்புகளும், உயர்ந்த நடிப்பும், பொழுது போக்கு அம்சங்களும் படத்தில் நிரம்பியிருக்கின்றன. (விமர்சனம் அடுத்த ஊசியில்.)



சினிமா பார்ப்பவர்:—என்னப்பா, எல்லாரும் திரையைப் பார்த்திட்டிருக்காங்க, நீ மட்டும் வெளிச்சம் வரும் துவாரத்தையே பார்த்திட்டிருக்கிறியே?

நாட்டுப் புறத்தான்:—இந்தப் படத்திலே புளிமூட்டை வருருன்னு சொன்னுங்க, அம்மாப் பெரிய மனுஷன் இம்மாத் தூண்டு துவாரத்தின் வழியா எப்படி வரப்போருருன்னுதான் பார்த்திட்டிருக்கேன்.

—ம். கணபதி, திருச்சி.

### 'ஜம்பம்' பத்திரிகைக் காக்ஷி

குஹன் பிக்சர்ஸாரின் **ஜம்பம்** தமிழ் சமூகப் படத்தின் பத்திரிகைக் காட்சி இந்த மாஸம் 14-ந் தேதியன்று கேஸினேவில் தடபுடலாக நடந்தது. இவ்வைபவத்திற்கு ஸ்ரீமான்கள் பக்தவத்ஸலம், கோபால் ரெட்டி, மாதவமேனன் ஆகிய மும்மந்திரிகள் விஜயம் செய்து படத்தைப் பாராட்டியதோடு, அதில் அடங்கியுள்ள உயர்ந்த தத்துவங்களையும், பிரசாரத்தையும் மிகப் போற்றினர், இந்தப் படத்திலும் சில மந்திரிகள் நடித்திருப்பது குறிப்பிடத் தக்கது. படத்தில் பொழுது போக்கு அம்சங்கள் நிரம்பியிருக்கின்றன. எல்லோரும் பார்த்து ரஸிக்கக் கூடிய படம் இது. (விமர்சனம் அடுத்த ஊசியில்)

### நடன விருந்து

சென்னை என்ஜினீயரிங் லைஸென்ஷியேட்ஸ் சங்க நிதிக்காக சென்ற மாஸம் 14ந் தேதியன்று ஸௌந்தர்ய மஹாலில், சென்னை சர்க்காரின் கல்வி சுகாதார இலாக்காகாரியதரிசி ஸ்ரீ. பி. எஸ் விஸ்வனதய்யர் தலைமையில், ஸ்ரீ. அருணசாந்தி தெவ் நடன கோஷ்டியார் ஒரு நடன விருந்தளித்தனர்.

### புதிய ஸ்டுடியோ

ஸ்டார் கம்பைன்ஸார் கோடம்பாக்கத்தில் தங்கள் ஸ்டுடியோவைக் கட்டி முடித்து விட்டார்கள். இந்த மாஸம் அந்த ஸடுடியோவில் வேலை ஆரம்பமாகிவிடும் என்று தெரிகிறது. நவீன சாதனங்களையும், நல்ல டெக்னிஷியன்களையும் கொண்ட இந்த ஸ்டுடியோ நல்ல படங்களை நமக்கு அளிக்குமென்று எதிர்பார்க்கிறோம்

எம். கே. தியாகராஜ பாகவதர்
நடிக்கும் "ராஜ முக்தி" தமிழ்ப் படம்
பிரபாத் ஸ்டுடியோவில் துரிதமாய்
தயாராகி வருகிறது.

ஜனவரி

1948

★

(யோக) மங்களத்தி
உண்மையிலே
யோகம் அடிக்கப்
கிறது. ஏவி. எம்.
ரித்து வரும் "வேத
உலக"த்தில் அவர்
படி காட்சி அளிக்கி

# பிரம்ம லோகம்

## பவழக் கொடி

பக்ஷிராஜா பில்ம்ஸாரின் "பவழக் கொடி"யில் டி. ஆர் மஹாலிங்கம் கிருஷ்ணனாகத்தான் நடிக்கப் போகிறாராம். மற்றும் டி. இ. வரதன், டி. ஆர். ராஜகுமாரி, எம். எஸ். சரோஜினி, கிருஷ்ணன், மதுரம், லலிதா, பத்மினி ஆகியவர்கள் நடிக்கிறார்கள். ஸ்ரீராமுலு நாயுடுதான் டைரெக்ட் செய்யப் போகிறார்.

## ராஜ முக்தி

பிரபல நடிகர் சாமாவுடனும், மற்றும் சுவாமிநாதன், ராஜகாந்தம், சஹாதேவன், வீரப்பா, ரங்கராஜ், பானுமதி, ஜானகி ஆகியவர்களுடனும் பாகவதர் நடிக்கும் (நரேந்திரா பிக்சர்ஸின்) "ராஜ முக்தி" புனா பிரபாத் ஸ்டுடியோவில் தயாராகி வருகிறதாம். பாடல்களும் சில காட்சிகளும் படமாக்கப் பட்டதாம். சாமா தகப்பனாராக உணர்ச்சியுடன் நடித்திருக்கிறாராம். ராஜா சந்திரசேகர் டைரெக்ட் செய்துவருகிறார்.

## சுதர்சன்

ராயல் டாக்கீஸ் "சுதர்சனி"ற்காக கண்ணாம்பா கோவை சென்று நடித்தாராம். படம் சுந்தர் ராவ் நட்கர்ணியின் டைரெக்ஷனில் தயாராகி வருகிறது.

"மதனமாலா"வில் வித்வான் ஸ்ரீநிவாசன்

## ஞான சௌந்தரி

சிடேடல் பிலிம் தயாரிக்கும் "ஞான சௌந்தரி" விரைவிலேயே வெளி வருமாம். டி. ஆர். மஹாலிங்கம், எம். வி. ராஜம்மா, டி. பாலசுப்ரமண்யம், பி. எஸ். சிவபாக்கியம், பேபி ராஜாமணி, ஸி. வி. நாயகம், பி. சாரதாம்பாள், பி. ஆர். மங்களம், பி. ஜி. வெங்கடேசன், புளிமூட்டை ராமசாமி, பபூன் ஷண்முகம், லலிதா, பத்மினி, முதலியவர்கள் நடிக்கிறார்கள். நாகூர் டைரெக்ட் செய்கிறார்.

## வேதாள உலகம்

பிரபல நாட்டிய ஜோடி லலிதா பத்மினி தவிர புகழ் பெற்ற தாரா சௌத்ரியின் நாட்டியத்தையும் "வேதாள உலகத்"தில் காணப் போகிறோம். மெய்யப்ப செட்டியார் செய்யும் ஒவ்வொரு காரியமும் பிரமிக்க வைக்கிறதல்லவா? இனி விரைவிலேயே, டி. ஆர். மஹாலிங்கம், மங்களம், சாரங்கபாணி, செல்லம், கமலா நடிக்கும் ஏ. வி. எம். "வேதாள உலகம்" திரையிடப்படலாம்.

## கிருஷ்ண பக்தி

ஆர். எஸ். மணியின் கவனமிக்க டைரெக்ஷனில் கிருஷ்ணா பிக்சர்ஸின் "கிருஷ்ண பக்தி" நியூடோனில் வளர்ந்து வருகிறதாம். 'கண்ணன் வருவாரோடி' என்ற பி. ஏ. பெரியநாயகியின் பாட்டுக்கு ருக்மணியாக நடிக்கும் ஏ. ஆர். சகுந்தலா அபிநயம் பிடிக்கும் காட்சி ஒன்று படமாக்கப் பட்டதாம். பி. யு. சின்னப்பா, ராஜகுமாரி, சிதம்பரம் ஜயராமன், டி. பாலசுப்ரமண்யம், ஏ. ஆர். சகுந்தலா. பி. ஏ. பெரியநாயகி, கிருஷ்ணன், மதுரம், ஆழ்வார் குப்புசாமி, கே. ஆர். ராமசாமி, புளிமூட்டை ராமசாமி போன்ற நக்ஷத்திரங்களுடன் அநேக நடிகர்கள் நடிக்கிறார்கள்.

## சந்திரலேகா

ஜெமினி ஸ்டுடியோவில் தயாராகும் "சந்திரலேகா"வின் படப்பிடிப்பு இரவும்பகலுமாக

நடைபெற்று வருகிறதாம். வருகிற மார்ச் மாதம் ஆருந் தேதி பல இடங்களிலும் திரையிடப்படுமாம். இப்படத்தில் ஹாஸ்ய விருந்தளிக்க கிருஷ்ணன் மதுரம் இருக்கின்றனர். ராதா, ரஞ்சன், ராஜகுமாரி, சுப்பையா பிள்ளை, சுந்தரி பாய் முதலியவர்கள் நடித்திருக்கிருர்கள். ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் கவனத்துடன் டைரெக்ட் செய்து வருகிருராம்.

### ஞானசௌந்தரி

ஜெமினியின் மற்ருெரு தயாரிப்பான "ஞானசௌந்தரி"க்காகவும் மும்முரமாகப் படப் பிடிப்பு நடைபெற்று வருகிறதாம். முருகதாஸா டைரெக்ஷனில் சுசீலா, ராதா, கிருஷ்ணமாச்சாரியார், கண்ணும்பா முதலியவர்கள் திறம்பட நடித்து வருகிருர்களாம்.

### கோராகும்பர்

...கய்யா, நாகர் கோ...ஹாதேவன் நடிக்கும் "கோராகும்பரு"க்காக ஒத்திகைகள் நடைபெற்றனவாம். கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரெக்ஷனில் தயாராகிறது இப்படம்.

"ஜம்பம்" தமிழ்ப் படத்தில் நடிக்கும் ஆர். கே. பட்டம்மாள்

### ஔவை

முருகதாஸா விடமிருந்து கொத்தமங்கலம் சுப்புவினுடைய டைரெக்ஷனிற்கு மாற்றப்பட்டிருக்கிறதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. படப் பிடிப்பு விரைவிலேயே ஆரம்பமாகலாம்.

### பாமா விஜயம்

சோபனுசலா ஸ்டுடியோவிலே ஏ. டி. கிருஷ்ணசாமியின் டைரெக்ஷனில் லாவண்யா பிக்சர்ஸின் "பாமா விஜயம்" வளர்ந்து வருகிறதாம். சமீபத்தில் இந்திராணி, இந்திரன், நாரதர் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப் பட்டனவாம். இந்திரனுக ஆர். எஸ். ராமசாமி ஐயங்காரும், இந்திராணியாக வி. செல்லமும், நாரதராக நாகர் கோயில் மஹாதேவனும் நடித்தார்களாம். பாமாவாக பி. எஸ். சரோஜாவும், கிருஷ்ணனுக டி. ஆர். மஹாலிங்கமும் நடிக்கிருர்கள். "பாமா சமேத கிருஷ்ணு" என்ற நாரதரின் பாட்டு வெகு நேர்த்தியாக அமைந்திருக்கிறதாம்.

Truthful READY MADE CLOTHES

அழகை அழகு பெறச் செய்வது
அழகான
"ட்ரூத்புல் ஆடைகளே"

தயாரிப்பவர்கள் :
ட்ரூத்புல் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,
மதுரை.

### ஜீவகன்

கந்தன் கம்பெனியாரின் "ஜீவகன்" டி. ஆர். ரகுநாத் டைரெக்ஷனில் வளர்ந்து வருகிறது. ஹொன்னப்பா, சகுந்தலா, ஜீவரத்தினம், வி. செல்லம், ஆழ்வார் குப்புசாமி, புளிமூட்டை ராமசாமி முதலியவர்கள் நடித்து வருகிருர்கள்.

### நல்ல தம்பி

நியூடோன் ஸ்டுடியோவில் என்னெஸ்கே பிலிம்ஸார் தயாரிக்கும் "நல்ல தம்பி"யின் படப்பிடிப்பு அடிக்கடி நடைபெறுகிறதாம். என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், ஆழ்வார் குப்புசாமி, சஹஸ்ரநாமம், ஸி. எஸ். பாண்டியன் முதலியவர்களுடன் பிரபல நடிகை பானுமதியும் நடிக்கிருராம். கதை வசனத்தை ஸி. என். அண்ணாத்துரை எழுதியிருக்கிருர்.

### மஹாபலி

நெப்டியூன் ஸ்டுடியோவில் பாபா பிலிம்ஸார் தயாரிக்கும் 'மஹாபலி' விரைவிலேயே திரைக்குத் தயாராகிவிடுமாம். ஜி. ஆர். வரதாச்சாரி, பி. எஸ். ராமுடு ஐயர், லக்ஷ்மி, விஷ்ணு ராமசாமி ஐயங்கார் முதலியவர்கள் இதில் நடித்திருக்கிருர்கள். பாஸ்கர் இதை டைரெக்ட் செய்து வருகிருர்.

### குடும்ப வாழ்க்கை

வைரம் செட்டியாரின் பிரபல நாடகமான "குடும்ப வாழ்க்கை" ஏ. டி. கிருஷ்ணசாமியின் டைரெக்ஷனில் வளருகிறதாம். பி. ஆர். பந்துலு, முத்துலக்ஷ்மி. வி. கே. கார்த்திகேயன் முதலியவர்கள் நடிக்கிருர்கள்.

### வேலைக்காரி

ஜூபிடர் பிக்சர்ஸார் தயாரிக்கும் "வேலைக்காரி"யின் படப்பிடிப்பு நடைபெற்றதாம். கே. ஆர். ராமசாமி ஒரு வக்கீலாகத் தோன்றி வாதிக்கும் கட்டம் படமாக்கப்பட்டதாம். டி. பிரேமாவதி, வி. என். ஜானகி, பாலையா, ஆகியவர்கள் நடிக்கிருர்கள். ஏ. எஸ். ஏ. சாமி இதை டைரெக்ட் செய்கிருர். அண்ணாத்துரைதான் கதை வசனத்தை எழுதியிருக்கிருர்.

### மோகினி

மாதுரி தேவியை பிரதம நடிகையாகக் கொண்டு ஜூபிடர் பிக்சர்ஸார் தயாரிக்கப் போகும் படத்தின்பெயர் "மோகினி"யாம். எஸ். டி. சுந்தரம் இக் கதையை எழுதியிருக்கிருர். ஏ. எஸ். ஏ. சாமி இப் படத்தையும் டைரெக்ட் செய்கிருர்.

A.V. & SONS
jewellers
130, SOUTH AVANIMOOLA ST.
MADURA

A. வயிரவன் செட்டி அன் சன்ஸ்.
நகை வியாபாரம்
130, தெற்காவணி மூல வீதி, மதுரை.

Telegrams: "VYRAM"


இப்ப வில்லன் கன்னத்திலே நீ அறை கொடுக்கணும். சத்தம் கேட்கும்படியா... அப்பத்தான் ஒலிப்பதிவாகும்
ஊ....ஹு... சும்மா தடவிக் கொடுக்கறயே!!
...என் பயப்படறே, ...சத்தமே கேட்க வில்லையே...
...இன்னும் கொஞ்ச பலமா அறையணும்.......
ரவாயில்லே ......
வூக்கே!
முகில்.

தமிழ் ஸினேரியோ

# கிச்சு-பிச்சு

பாலபாரதி ச.து.சு.யோகி

மணியன்.

(ஆசிரியர் உரிமை)

[முன் தொடர்ச்சி]

## களம் 1. காட்சி 8.

[இடம்—வீட்டுக் கூடம்] [நடர் - கிச்சு - பிச்சு - எச்சி] [காலம் - மாலை]

க. 1 - 47.

தொலைவுக் காட்சி—மூடி நேர்—படக் கருவி இட வலமாக ஒரு வளைவில் இயங்குகிறது. முதலில் இடத்திலிருந்து ஆரம்பம்; கிச்சு படுக்கை தலையணைகளுடன் குஸ்தி செய்த பஞ்சபிஷேகக் கோலத்தோடு, கண்மேல் படிந்துள்ள பஞ்சுகளைத் துடைத்தவாறே வருகிறான்.

கிச்சு :- நான் பெரிய முட்டாள் !

படக் கருவி சடக்கென்று மறுபுறம் பாய்கிறது: கிச்சுவைப் போலவே பிச்சுவும் அதே கோலத்தில் கண்ணைக் கசக்கிய வாறே வருகிறான்.

பிச்சு :- நான் சர்வ முட்டாள்.

படக்கருவி வளைவின் நடுவில் நெட்டு நிற்கிறது, அதன் கீழ் ஒரு மடக்கு ஏணி, அதன் மேல் தட்டு; மூடி நேர்க் காட்சியால் அழுங்கியது போலும் காண்கிறது. ஆள்கள் இருவரும்கூடக் கோணு மாணுக் குள்ளர்களாகக் காட்சி அளிக்கின்றனர்.

இருவரும் வந்து ஏணியில் முட்டிக் கொள்கின்றனர், கால் தடுக்குகிறது.

இப் பகுதியில்—முழுக் காட்சிக்கும் பொதுவாய் மூடி நேர்க் கூரொளியும், இரு புறத்திலும் மூடி நிறைச் சேரொளியும் ஒரு புறத்துச் சாய்ப்பில் மூடி நிரைப் பேரொளியும் (ஏணியின், ஆட்களின் நிழல்கள் காட்சியின் தன்மையை அழகும், அர்த்தபுஷ்டியுமாகச் செய்ய) எதிரில் சமநேர் வேரொளியுமாய் அமைக்க வேண்டும். கூரொளி கருவியின் வளைவோடு தானும் வளைவில் சலனமாகிறது.

இத் தூக்கு அவர்கள் இருவரும் ஏணியில் கால் தடுக்கித் தடுமாறும் வரை.

[வெட்டு]

க. 1 - 48.

அடி நிரைத் தொலைவு மத்யம்—பட்க் கருவி தரையிலிருந்து ஓரடி உயரத்திலிருக்கிறது, மடக்கு ஏணி

யின் மைய வெளிக்கு நேராக—இருவரும் தட்டுத் தடு மாறி ஏணிமேல் விழுகின்றனர்.

[கருவிப் பாய்ப்பு]

வெகு வேகமாக—முன்னேக்கி—நெட்டுச் சலனம்—இரு முகங்களும் ஏணி வரையில் இடையில் தொங்கும் அணிமை வரை—அவ் வணிமை அடி நேர்க் காட்சியில் விளங்குகிறது; இக் காட்சிக்கு இருபுற ஓரங்களி லிருந்தும் பக்க வாட்டுக் கூரொளி அமைக்கவும்—ஒளிக் கூர்மை நிமுற செவ்விக்காக ஒன்றைவிட ஒன்று கம்மியா யிருக்க வேண்டும்.

[வெட்டு]

க. 1 - 49.

நேரணிமை—தொங்கிய முகங்கள் நிமிர்ந்து கோபத்தோடு ஒன்றை யொன்று நோக்கி.

கி :-முட்டாள்!

பி :-அடி முட்டாள்!

கி :-யாருடா முட்டாள்?

பி :-யாருடா அடி முட்டாள்?

கி :-நீ தாண்டா!

பி :-நீயே தாண்டா.

முதலில் முகம் நிமிர்ந்தது. அப்பால் முன்னேக்கி நீண்டது, கைகள் கேள்விக் குறியாய் இணைந்தன. பிறகு சுட்டு விரல் நீட்டி யிடித்தன.

[கருவிப் பாய்ப்பு]

வேகமாய் முன்னேக்கி—முகத்தின் முன் வரிகளும், கைகளின் குறியும் கூடிய நுண்ணணிமை.

[வெட்டு]

க. 1 - 50.

மத்யக் காட்சி—நேர்—இருவரும் பேசியவாறே மேலே ஏறுகின்றனர்—கருவி 2 அடி உயரத்தில். ஒவ்வொருவரும் மார்பு தட்டியவாறே படிப்படியாய் மேலே ஏறுகின்றனர்.

கி :-நான் யார் தெரியுமா?

பி :-நான் யார் தெரியுமா?

கி :-நான் வீராதி வீரன்!

பி :-நான் சூராதி சூரன்!

[வெட்டு]

க. 1 - 51.

மத்ய அணிமை, பக்க வாட்டு, பிச்சு சட்டகம் (in Suggestion), கிச்சு நேர் முகம் முன் வந்து, கை யாட்டி.

கி :-ஓகோ! ஒனக்கு அவ்வளவா யிடுத்தா?

[வெட்டு]

க. 1 - 52.

மத்ய அணிமை—சென்ற தூக்கே போல் மறுபுறத்தில், கிச்சு சட்டகம், பிச்சு நேர்முகம், அவனும் கிச்சு போன்றே.

பி :-ஓகோ! ஒனக்கு இவ்வளவா யிடுத்தா?

[வெட்டு]

க. 1 - 53.

முடி நிரை மத்ய அணிமை—இருவரும் பின்புறமாய்ச் சாய்ந்து, ஒருவரை ஒருவர் நோக்கி, ஒரு கை பற்றி மறுகை யாட்டி.

கி :- நீ எச்சியைக் கண்ணலம் பண்ணிக்கறத்தெப் பாக்கறேன்.

பி :- நீ எச்சியெக் கண்ணலம் பண்ணிக் கறத்தெ நானுந்தான் பாக்கறேன்.

[வெட்டு]

க. 1 - 54.

அடி நிரை - அணிமை - மறுபுறம் இருவரும் சாய்ந்து தலை தொங்கிக் கண் கெட்டு முக முக மிடிப்பதுபோல்.

கி :-ஏண்டா தடியா! என்னடா சொன்னே?

பி :-ஏண்டா, குடியா என்னடா சொன்னே?

[வெட்டு]

க. 1 - 55.

அடி நேர் மத்யம்-ஏறி யிறங்கும் படக் கருவிதாங்கி (Tripot) அல்லது தூக்கிப் பாய்ப்புத் தூக்கு—மத்யத்திலிருந்து வேகமாய் அணிமைக்குப் போகிறது.

கி :-ஏண்டா குருடா!

பி :-ஏண்டா முரடா!

கி :-என்னடா!

பி :-என்னடா!

கி :-ஏண்டா !!!

பி :-ஏண்டா !!!

முகமும் கைகளும் முன்னேக்கிப் பாய்கின்றன.

இவ்வாறு ஒருவர் முகத்தில் ஒருவர் குத்துகின்றனர்.

[வெட்டு]

க. 1 - 56.

மத்ய அணிமை-பக்கவாட்டு, பிச்சு சட்டகம், கிச்சு நேர்முகம், குத்து விச்சு. பிச்சுவின் கை வீச்சும், கிச்சுவின் கஷ்டமும்.

[வெட்டு]

க. 1 - 57.

மத்ய அணிமை-முன் போலவே, மறுபுறம், பிச்சு நேர் முகம்.

[வெட்டு]

க. 1 - 58.

அடி நிரை–அணிமை–ஒருவர் கால் முதல் மற்றொருவர் கால் வரைப் புறச் சலனம், அல்லது கருவி முன் பக்கப் பாய்ப்பு, கால்கள் தடுமாற்றம், உடல்களின் உளைச்சல்கள், கைகளின் அவசரக் கோப்பு, வீச்சு.

[வெட்டு]

க. 1 - 59.

அடி நேர் அணிமை—இருவர் முகங்களும், கைகளும் இணைதல், பிணைதல், அணைதல், குணைதல், அழுக்கல், உழுக்கல், விழுக்கல் முதலியன.

[வெட்டு]

க. 1 - 60.

முடி நேர் அணிமை—ஒருவர் முகத்தை ஒருவர் திருப்பல்—இருவரும் கீழிருந்து ஏமல் நோக்குகின்றனர்.

[வெட்டு]

க. 1 - 61.

[உள் நுழைவு] (Insert) முடி நேர் நுண்ணணிமை. கழுத்தும் முகமும் நரம்புப்புடைத்து முறுக்குறும் காட்சி.

[வெட்டு]

க. 1 - 62.

அதேபடி மற்றவனுக்கும்.

[வெட்டு]

க. 1 - 63.

முடிநேர் மத்யம்—இருவரும் ஒருவரை ஒருவர் ஈர்த்தவாறே கீழே சரிகின்றனர்—நல்ல வேளையாய் முழங்கால் மடித்து ஏணியின் சட்டம் ஒவ்வொன்றிலாகத் தொங்கிச் சண்டை செய்கின்றனர்.

[தூக்கிப்பாய்ப்பு]

வேகமாய் அணிமை வரை—தூக்கி அல்லது வேறு ஏதாவது பாய்ப்பு. இதே சமயம் எச்சியின் குரல் கேட்கிறது.

வெளி வசனம்

எ :-ஆ! இதென்ன கூச்சல்?.........?

[வெட்டு]

இதற்கப்பால் எச்சி வருவதும், சமாதானம் செய்வதும், மூவரும் ஆபத்தில் சிக்கி அடிபடுவதும், அதன் பிறகு நடப்பவைகளும் கதைப் போக்கிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியவை. நாம் இப்போது கதை எழுத முன்வரவில்லை. ஸினேரியோ முறையை விளக்கவே முன்வந்தோம். இக் கதையும் தமிழ் நாட்டின் எல்லாக் கதைகளையும் போலவே மங்களகரமாக முடிகிறதென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எமது கதையின் மேலுள்ள இரண்டு சின்னஞ் சிறு பகுதிகளால் ஸினேரியோ வகையை ஓரளவு எம் சிற்றறிவுக்கு எட்டிய வரையில் தெளிவாக்கியுள்ளோம். இதே முறையில் கதைகளைக் களங்கள், காட்சிகள், தூக்குகளாகவும் பிரித்து, கதையின் வஸ்து தர்மம் (Thematic Content) மாறுமல், சுவையுடன் அமைப்பதே ஸினேரியோ வித்தை.

மேலுள்ள பகுதியில் ஒரேயொரு உள் நுழைவுக் காட்சியைத்தான் நாம் காட்டியிருக்கிறோம். இதைப் போன்ற பகுதிகளில் உண்மையான ஸினேரியோவில் இன்னும் எத்தனையோ உள் நுழைவுகள் உருவாக வேண்டும். அவற்றை இடத்தின் சிறுமை நோக்கி இங்கு விட்டுவிட்டேன். எனினும் ஒன்றிரண்டை இங்கு குறிப்பிடுகிறேன். பொதுவாக இயற்கைக் காட்சிகளைத் தவிர மற்ற உள் நுழைவுகள் நுண்ணணிமைகளாகவே விளங்கும். இந்தக் கட்டத்தில், உதடுகள் துடிப்பும், கைகளின் பரபரப்பும், மூக்குகளின் வெடைப்பும், கண்ணிமைகளின் துடிப்பும், பற்களின் நற நறப்பும், வியர்வையின் திமிர்ப்பும், மார்பின் பொங்கலும், பெருமூச்சின் ஒலியும், கை முட்டியின் குத்

## அனைவருக்கும் எங்கள்
## மங்களகரமான பொங்கல் வாழ்த்துகள்!

பண்டிகைகள், கலியாண வைபவங்கள் இவைகளைப் பிரகாசிக்கச் செய்யும் உயர்தர பட்டு, பனாரஸ், புடவை தினுசுகளும், மில், கைத்தறி ஜவுளிகளும் பல ரகங்களில் ஏராளமாய் உள்ளன. இன்றே விஜயம் செய்யுங்கள்.

# ஹமீதியா ஸ்டோர்ஸ்

நாகரீக ஜவுளி வியாபாரிகள்

22, கீழச் சித்திரை வீதி,

மதுரை.

# ஜோதி போட்டோ ஸ்டுடியோ

222 மேல மாசி வீதி, மதுரை.

(உடுப்பி போர்டிங் லாட்ஜிங் எதிரில்)

போட்டோ வேலையின் நவீன சாதனங்களுடன் திறமைவாய்ந்த வேலையாட்களைக்கொண்டு புதிய முறையில், போட்டோ எடுத்து கொடுப்பதற்கு முன் வந்துள்ளோம். அன்பர்கள் யாவரும் ஒரு முறை எங்கள் ஸ்டுடியோவில் ஆர்டர் கொடுத்து எங்களுடைய வேலைப்பாடுகளின் திறமையைக் கண்டு களிக்க வேண்டும் என்று அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அமெச்சூர் டெவலப்பிங், & பிரின்டிங்
சுத்தமாக செய்து தரப்படும்.

தங்கள் அன்பான ஆர்டர்களை எதிர்பார்க்கும்:

**M. B. லெங்காராம்.** (புரொப்ரைட்டர்)

தும், கண்ணும், கன்னமும், தாவாயும், மோவாயும், மூக்கும், நெற்றியும் அடிபட்டுக் கன்னிப் போய் வீங்குதலும், தலை மயிர்கள் பிய்வதும், கை நரம்பு கழுத்து நரம்புகள் புடைப்பதும், முறுக்கேறுவதும், தசை நார்களின் தடிப்பும், தசைகளின் உளைப்பும், மற்றும், ஏணிமேல் சண்டையால் ஏற்படும் பல ரகமான உடற் பாங்குகளின் கோணல், குழைச்சல், நுழைச்சல், நுளைச்சல், வளைச்சல் முதலான பலவும் உள் நுழைவுக் காட்சிகளுக்கு ஏற்றவையே யாகும்.

தவிர, இந்தக் கட்டத்தில் முதலில் எழுதியுள்ள ஒளி விகாசம் மாருமல் ஆனல் அந்தந்தத் தூக்குக் கேற்ப அவ்வப்போது கூரொளியைச் செவ்வனே உபயோகிக்க வேண்டும். இதில் பெரும்பாலும் முடிநேர், முடி நிரை, அடி நேர், அடி நிரை, பக்க வாட்டு, சுழலொளி (moving lighting), தேக் கொளி (constant lighting), தியக் கொளி (light modulation), குலுக் கொளி (Rugg-led lighting)—இவற்றுடன், நிழல் பாங்கு, ஏணிச் சட்டங்களைச் சட்டங்களாய் உபயோகித்தல் முதலிய பல நுணுக்கங்களைக் கையாள வேண்டும். அவை யாவைக்கும் இப்பத்திரிகையில் இடம் போதாது.

எனினும், ஓரளவு ஒரு கதைப் பகுதியை நேரடியாக, மிக மிக நுணுக்கமான காட்சிகளை நீக்கி, எப்படி சினிமாவுக்காக எழுதுவது என்பதை "குண்டுசியாரி"ன் கட்டளைக் கிணங்க ஒருவாறு நிறைவேற்றி யுள்ளேன். குற்றம் குறைகளிருப்பின் அறிஞர்கள் மன்னிக்க வேண்டும்.

மற்றொரு விஷயம், மேல் கூறிய கட்டத்தில் நுண்ணணிமைகளில் சில சமயங்கள் நோக்க நிமைப்பு (Focus manipulation) செய்வதும் நலமாயிருக்கும்.

ஈற்றில் ஒரு வார்த்தை; அந்தந்தக் கட்டத்தில் அவைக் கேற்ற காட்சி ஜோடனைகளையும் சினேரியோக்காரன் குறிப்பது நல்லது.

இம்மாதிரியே ஒரு கதையைத் தயாரித்துக் கொண்டு, படப் பிடிப்பாளர், ஒலிப்பதிவாளர், நட - நடிகள் முதலியோருக்கு நம் கருத்தை நன்கு விளக்கி, யாவரையும் 'ரெடி' செய்து கொண்டு போனல் படம் சீக்கிரம் முடியும்; சிறப்பாகவும் விளங்கும்.


# KAREEM WATCH COMPANY

**(Guarantee Repairers, Dealers, General Merchants and Commission Agents)**

**— புதிதாய் வந்துள்ளன —**

கிராமபோன் ஸ்பேர் பார்ட்ஸ், புதிய வாட்சுகள், புதிய பவுண்டன் பேனக்கள், மற்றும் பான்ஸி சாமான்கள், இவை விலை சரஸமாயும், உத்திரவாதமுடனும் கிடைக்கும்.

**காட்சி சாலை :**

**53, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை.**

ஸௌரபி பிக்சர்ஸார் தயாரித்துக் கொண்டிருக்கும் "பக்த கும்பரா"
கன்னடப் படத்தில் ஒரு மனமுருக்கும் காக்ஷி.
(லக்ஷ்மிபாயும், ஸி. ஹொன்னப்ப பாகவதரும்)


அறிவும் அதிர்ஷ்டமும் ஒன்று சேரும்போது
புகழும், பணமும் தானுக வந்தடையும்

**உங்கள் அறிவையும் அதிஷ்டத்தையும்**
**பரிக்ஷித்தீர்களா ?**

இல்லையேல்—

**நாங்கள் அளிக்கும் சந்தர்ப்பத்தை இன்றே**
**பயன்படுத்திக் கொள்ளுங்கள்**

**எந்த தேசத்தினராயினும், எந்த மாகாணத்தவராயினும், எந்த மதத்தினராயினும், எந்த பாஷையினராயினும், படித்தவர்களாயினும், படிக்காதவர்களாயினும், வாலிபர்களாயினும், வயோதிகராயினும், ஏழையாயினும், பணக்காரராயினும், வித்தியாசமின்றி**

**இந்த அறிவு-அதிர்ஷ்டப் பரீக்ஷையில் கலந்து கொள்ளலாம்.**

**விவரங்களுக்கு ஒரு கார்டு எழுதிப் போடுங்கள்.**

**லக் & கோ**

**தியாகராய நகர்**
**சென்னை. 17.**

# குண்டூசி டைரி

## டிஸம்பர், 1947.

தேதி

1 எஸ். எம். படங்களில் குரலிரவல் கொடுத்திருக்கும் ராஜேஸ்வரிக்கும் சுப்ரமண்யத்திற்கும் திருமணம் நடந்தேறியது.

8 சென்னை சினிமா தணிக்கை போர்டு மாற்றி அமைக்கப்பட்டது.

11 எம். எஸ். சுப்புலக்ஷ்மி (பம்பாயில்) தம் ஒரே ஒரு கச்சேரி மூலம் ரூ. 98,000 வசூலித்து தென்னிந்தியக் கல்விக் கழகத்தின் கட்டட நிதிக்கு உதவினர்.

12 ஸ்ரீ ராமானந்தா பிக்சர்ஸின் "மதனமாலா" தமிழ்ப் படம் வெளியூர்களில் வெளியிடப்பட்டது.

மாடர்ன் தியேட்டர்ஸின் "ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி" சென்னை (பிராட்வே, சரஸ்வதி)யிலும் வெளியூர்களிலும் வெளியிடப்பட்டது.

14 என். எஸ். கிருஷ்ணனின் தலைமையில் செயின்ட் மேரீஸ் ஹாலில் என். ஏ. சுந்தரத்தின் கச்சேரியும், குமாரி கல்யாணியின் நடனமும் நடைபெற்றன.

இந்திய செய்திப்பட இலாக்காவை புனருத்தாரணம் செய்வதுபற்றிய திட்டத்தை இந்திய சர்க்காரின் நிரந்தர பொருளாதாரக் கமிட்டி அங்கீகரித்தது.

கனம் ஸ்ரீ. ஜே. சிவஷண்முகம் பிள்ளை தலைமையில் காந்திஜி பக்த சபாக் கச்சேரிகள் ஆரம்பம். டைரெக்டர் கே. சுப்ரமண்யம் வரவேற்புப் பிரசங்கம் செய்தார். கனம் பி. சுப்பராயன் முதலானவர்கள் பிறகு பேசினார்கள். பி. ஏ. பெரிய நாயகியின் கச்சேரியும், யோக மங்களத்தின் நாட்டியமும் நடைபெற்றன.

19 "தமிழ் ராம ராஜ்யம்" படத்தின் வர்த்தகக் காக்ஷி சென்னை ஸாகர் டாக்கியில் நடைபெற்றது. சென்னை ஸாகரிலும், கிரௌனிலும் இப்படம் இன்றே வெளியிடப்பட்டது.

23 தமிழிசைக் கச்சேரிகளும், சங்கீத வித்வத் சபைக் கச்சேரிகளும் ஆரம்பம்.

28 பரணி பிக்சர்ஸின் "ரத்னமாலா" தெலுங்குப் படத்தின் வர்த்தகக் காக்ஷி நியூ குளோப்பில் நடைபெற்றது.

---

Printed by P. Arunachalam at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 246, Thambu Chetty Street, Madras 1.

கிருஷ்ண பக்தி
டைரக்ஷன்: R. S. மணி
பி. யு. சின்னப்பா
டி. பாலசுப்ரமண்யம்
கே. ஆர். ராமசாமி
ஸி. எஸ். ஜெயராமன்
என். எஸ். கிருஷ்ணன்
புளிமூட்டை
டி. ஆர். ராஜகுமாரி
எஸ். பி. எல். தனலக்ஷ்மி
பி. ஏ. பெரியநாயகி
ஏ. ஆர். சகுந்தலா
டி. ஏ. மதுரம்
ஸி. டி. ராஜகாந்தம்
ஸ்டுடியோ : நியூடோன்
கிருஷ்ணா பிக்சர்ஸ்
சென்னை .17.
நவீன்

தமிழ் நாடெங்கும் வெற்றி முழக்கம்!

# ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி

டைரெக்ஷன்: டி. ஆர். சுந்தரம், பி.ஏ., பி.எஸ்ஸி., (லீட்ஸ்).

12—12—47 முதல் நடைபெறுகிறது

சென்னை

## பிராட்வே ☆ சரஸ்வதி

12—12—47 முதல்

| | | |
|---|---|---|
| சேலம் | ... | ஸென்ட்ரல் |
| கடலூர் | ... | நியூ ஸினிமா |
| காஞ்சிபுரம் | ... | முருகன் |
| சிதம்பரம் | ... | வடுகநாதர் |

25—12—47 முதல்

| | | |
|---|---|---|
| நாகர்கோவில் | ... | பயோனீர் பிக்சர்பாலஸ் |
| செங்கோட்டை | ... | ஜெயலக்ஷ்மி டாக்கீஸ் |
| திருச்சூர் | ... | ஜாஸ் தியேட்டர் |

9—1—48 முதல்

| | | |
|---|---|---|
| மதுரை | ... | நியூ ஸினிமா |
| காரைக்குடி | ... | நடராஜா டாக்கீஸ் |
| விருதுநகர் | ... | ஸென்ட்ரல் ஸினிமா |
| வேலூர் | ... | கிரௌன் |

13—1—48 முதல்

| | | |
|---|---|---|
| மதராஸ் | ... | ஸன் தியேட்டர் |

சீக்கிரம் வெளி வரும்

| | | |
|---|---|---|
| சாகர் டாக்கீஸ் | ... | பங்களூர் |
| ஸன் தியேட்டர் | ... | பாலக்காடு |
| வெலிங்டன் டாக்கீஸ் | ... | திருச்சினாப்பள்ளி |

## மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்,

சேலம்.